# அன்புத் தாத்தா

UNIVERSITY EXTENSION LIBRARY
12 DEC 1961
MADURAI

வே. தா. கோபாலகிருஷ்ணன், எம். ஏ.
(பூவண்ணன்)

**பாரி நிலையம்**
*59, பிராட்வே*
**சென்னை-1**

முதற் பதிப்பு : நவம்பர் 14, 1957.
இரண்டாம் பதிப்பு : மே, 1961.

விலை ரூ. 1

முத்தையா அச்சகம், 202, ஜானி ஜான் தெரு, சென்னை–14

# பதிப்புரை

இப்புத்தகத்தின் ஆசிரியர் திரு. 'பூவண்ணன் சுமார் எட்டு ஆண்டுகளாகச் சிறுவருக்காக எழுதி வருபவர்; தமிழ் எழுத்தாளர் சங்கம் நடத்திய ஓரங்க நாடகப் போட்டியிலும், குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய நாடகப் போட்டியிலும் பரிசுகள் பெற்றவர். தற்போது சென்னை விவேகானந்தா கல்லூரியில் ஆசிரியராக இருக்கின்றார். இதுவரை சுமார் பதினைந்து சிறுவர் புத்தகங்களை எழுதி, தமிழ்ச் சிறுவருக்கு நன்கு அறிமுகமானவர்.

இவரது கதைகளில் உயர்ந்த பண்புகளைக் காணலாம். நல்ல தமிழில் சிறுவரின் உள்ளத்தைக் கவரும் வகையில் இவர் எழுதியுள்ள இக் கதைகளைப் படித்துச் சிறுவர் உலகம் இன்பம் அடையும் என நம்புகிறோம்.

ஆசிரியருக்கு எங்கள் நன்றி.

**சென்னை**<br>**14-11-'57**

பாரி நிலையத்தார்

UNIVERSITY EXTENSION LIBRARY
★ MADURAI ★

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| அன்புத் தாத்தா | ... | 5 |
| நிலாவின் சிரிப்பு | ... | 19 |
| ஆயிரம் ரூபாய் | ... | 26 |
| நிழலின் அருமை | ... | 35 |
| ஊர்மிளா | ... | 45 |
| புலிவேட்டை | ... | 54 |
| அன்புமணியின் அப்பா | ... | 64 |

UNIVERSITY EXTENSION LIBRARY
★ MADURAI ★

# அன்புத் தாத்தா

ஒற்றையடிப் பாதை ஒன்று வளைந்து வளைந்து பொன்னிக்குப்பம் கிராமத்தை நோக்கிச் சென்றது. நல்ல வெய்யில் நேரம். சூரியன் உச்சி வானத்தில் இருந்தான். அந்தப் பாதையிலே ஒரு கிழவர் வந்து கொண்டிருந்தார். வலது கையிலே ஒரு தடி; இடது கையிலே ஒரு சிறு மூட்டை; தோளிலே ஒரு துண்டு— இவற்றுடன் அந்தக் கிழவர் தள்ளாடித் தள்ளாடி நடந்தார். சூரியனின் வெப்பத்தை அவரால் தாங்க முடியவில்லை. அவர் முகத்திலே முத்துக்கள் போல வியர்வைத் துளிகள் நிறைந்திருந்தன. கிழவர் சிறிது நின்ருர்; இடது கையிலிருந்த மூட்டையை வலது கைக்கு மாற்றிக் கொண்டார்; தோளில் போட்டிருந்த துண்டினுல் முகத்தை நன்ருகத் துடைத்துக் கொண்டார்.

இன்னும் எவ்வளவு தூரம் போக வேண்டும் என்று பார்த்தார். சிறிது தூரத்திலிருந்த கிராமத்து வீடுகள் அவர் கண்களில் பட்டன. உடனே, கிழவரின் முகம் மலர்ந்தது. தடியை ஊன்றியபடி, தூரத்தில் தெரிந்த கிராமத்தை நோக்கி நடந்தார்.

அவர் யார்?

அவர் பெயர் அருளப்பர். அவர் தனி மனிதர். பெண்டாட்டி பிள்ளை கிடையாது. அவருக்கு நிறையச்சொத்து இருந்தது. அதைக்கொண்டு அவர் மட்டும் சுகம் அடைய விரும்ப வில்லை. அவர் தன் சொந்தக் கிராமத்தில் இலவசப் பாடசாலை, சிறுவர் நூல் நிலையம், விளையாட்டு மைதானம் முதலியவற்றை நிறுவினர். அத்துடன் நில்லாமல், கால் நடையாகவே தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமத்துக்கும் சென்று, அங்குச் சில வாரங்கள் தங்குவார். கிராமச் சிறுவர் சிறுமிய ரெல்லாம், அவரைச்சுற்றியே இருப்பார்கள். அருளப்பர் எளிய பாடல்களை அவர்களுக்குச் சொல்லித் தருவார். ஒவ்வொருவருக்கும் தம்முடைய மூட்டையிலுள்ள புத்தகங்களைக் கொடுப்பார். இப்படியே ஒவ்வொரு கிராமமாகச் செல்வார். அவர் சொத்தை நம்பிக்கைக்கு உரிய ஒருவரிடம் ஒப்படைத்து விட்டு, இப்படிச் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருந்தார்.

அருளப்பரின் பெயர் ஏறக்குறையத் தமிழ் நாடு முழுதும் பரவி யிருந்தது. இப்போது அருளப்பர் பொன்னிக் குப்பத்திற்குச் செல்கிருர். பொன்னிக் குப்பத்திற்கு, இதற்கு முன் இருமுறை வந்திருக்கி

ருர். அவருக்குக் கிராமத்தில் உள்ள பெரும் பாலோரை நன்ருகத் தெரியும், பொன்னிக் குப்பத் தில் பொன்னன் என்னும் சிறுவனே, அவருக்கு மிக வும் பிடித்திருந்தது. அவனேப் பற்றி நினேத்துக் கொண்டே நடந்தார் அருளப்பர்.

கிராமத்தை நெருங்கி விட்டார். ஒரு மரத்தடி யில் ஒரு சிறுவன் சோகமாக உட்கார்ந்திருப்பதைக் கண்டார். அவனேக் கூர்ந்து பார்த்தார் அருளப்பர். உடனே அவர் "அடடே, பொன்னனு!" என்ருர்.

அவர் வந்ததைக்கூட அறியாமல் பொன்னன் எதையோ சிந்தித்துக் கொண்டிருந்தான். அருளப் பர் அன்பு நிறைந்த குரலில், "பொன்னு!" என்று திரும்பவும் அழைத்தார். உடனே பொன்னன் திடுக் கிட்டுத் திரும்பிப் பார்த்தான். பார்த்ததும், "யார்? தாத்தாவா!" என்று கேட்டான்.

"ஆமாம் பொன்னு! நீ ஏன் இந்த உச்சி வேளே யில் இங்கே உட்கார்ந்திருக்கிருய்?" என்று கேட்டுக் கொண்டே அருளப்பர் அவனருகில் அமர்ந்தார்; கையிலிருந்த தடியை மரத்தில் சாய்த்து நிறுத்தினுர். கொண்டு வந்த மூட்டையைக் கீழே வைத்தார். பிறகு ஆயிரமாயிரம் குழந்தைகளே அணைத்து மகிழ்ந்த அன் புக் கைகளினுல் அவனே இழுத்து அணைத்துக்கொண் டார். "பொன்னு, ஏன் வருத்தமாக இருக்கிருய்?" என்று கேட்டார்.

உடனே பொன்னன், "தாத்தா! சென்ற தடவை பொங்கலன்று இந்தக் கிராமத்திற்கு வந்தீர்களே,

நினைவிருக்கிறதா?'' என்று கேட்டுக்கொண்டே அந்தத் தாத்தாவின் முகத்தைப் பார்த்தான்.

''ஆமாம்! நினைவிருக்கிறது. கிழவர்களுக்கு ஞாபக சக்தி இருக்காது என்று நினைத்து விட்டாயா பொன்னு?''—தாத்தா சிரித்துக்கொண்டே கேட்டார்.

''அப்போது ஒரு சின்ன ஆட்டுக் குட்டியை எனக்கு வாங்கித் தந்தீர்களல்லவா? அதை நான் அன்போடு வளர்த்து வந்தேன். அதைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு உங்கள் நினைவு வரும்.''

—பொன்னன் முழுவதையும் கூறி முடிக்க வில்லை. அதற்குள் தாத்தா குறுக்கிட்டார்; ''அதற் கென்ன இப்போது?'' என்று கேட்டார்.

''அதற்கு இப்போது ஆபத்து வந்து விட்டது! தாத்தா, அந்த ஆட்டுக் குட்டி வளர்ந்து கொஞ்சம் பெரிதாகி விட்டது, அதை நான் அன்போடு வளர்த்து வருகிறேன். அது என்னை விட்டுப் பிரியவே பிரியாது. இந்த ஊரில் மழையே பெய்ய வில்லை. குளத்தில் குடிக்கக்கூட நீரில்லை. பயிர்களெல்லாம் வாடி விட்டன. கிராமத்தார் தங்கள் சொத்தை யெல்லாம் விற்று வாழ்ந்து வருகின்றனர். இன்னும் சில நாட்கள் மழை பெய்யாம லிருந்தால் இந்தக் கிராமத்தை விட்டு எல்லோரும் ஓடவேண்டியதுதான். நேற்று பூசாரி ஆறுமுகம் பண்ணைக்காரரிடம், 'காளிக் குப் பூசை போடாததால்தான் மழை பெய்யவில்லை. ஓர் ஆடு பலி கொடுத்தால் உடனே மழை பெய்யும்' என்று சொன்னான்.

''பண்ணைக்காரர் அப்படியே பலி கொடுக்கச் சம்ம தித்தார். அந்தக் கருமியிடம் பல ஆடுகள் இருக்கின்

றன. ஆனாலும் மனம் இல்லை. ‘பலி கொடுப்பதற்கு என் ஆடுகளெல்லாம் லாயக்கு இல்லை. ராமசாமி மகன் பொன்னனிடம் ஓர் அழகான ஆடு இருக்கிறது. அதைப் பிடித்து வந்து பலி கொடுங்கள்’ என்று பண்ணைக்காரர் கிராமத்திலுள்ள சில பெரிய மனிதர்களிடம் கூறினாராம். அவர்கள் என் அப்பாவிடம் வந்து ஆட்டைக் கேட்டனர். அவருக்கு என் ஆட்டைக் கொடுக்க விருப்பமில்லை. ஆனாலும், ‘ஆண்டவன் காரியத்துக்குத் தடை சொல்லாமல் ஆட்டைக் கொடு’ என்று வந்த பெரியமனிதர்கள் வற்புறுத்தினதால், என் தந்தை கிராமத்துப்பெரிய மனிதர்களின் விரோதத்தைத் தேடிக்கொள்ள விரும்பவில்லை. என் ஆட்டை அவர்களுக்குக் கொடுத்துவிட ஒப்புக் கொண்டார். அன்போடு வளர்த்த என் ஆட்டை நான் எப்படித் தாத்தா கொடுப்பேன்? ‘ஆட்டைத் தரமாட்டேன்’ என்றேன். என் தந்தை இரண்டு அறை கொடுத்து என்னை அடக்கினார். தோட்டத்திலிருந்த ஆட்டை வந்தவர்கள் பிடித்துக்கொண்டு போய்விட்டனர்.

“தாத்தா, இப்போது காளி கோயிலின் முன்னால் கழுத்தில் பூமாலையுடன் என் ஆடு நிற்கிறது. இன்னும் சிறிது நேரத்தில் அதை வெட்டி விடுவார்கள்”

பொன்னன் இதைக் கூறிவிட்டு அழுதான். அழுதுகொண்டே, “தாத்தா, கடவுள் ‘எனக்கு ஆடு வெட்டிக்கொடு’ என்று கேட்பாரா? சொல்லுங்கள் தாத்தா. எந்த உயிருக்கும் தீங்கு செய்யக் கூடாது என்று நீங்கள் சொன்னீர்களே, கடவுள் மட்டும் ஓர்

உயிரைக் கொன்று தா என்று கேட்கலாமா?'' என்று கேட்டான்.

''இந்தச் சிறுவனுக்கு இருக்கும் அறிவுகூடப் பெரியவர்களுக்கு இல்லேயே!'' என்று அருளப்பர் எண்ணினுர். உடனே எழுந்தார்; தடியை எடுத்துக் கொண்டார்; மூட்டையை எடுத்துக் கொண்டார். "பொன்னு, என்னுடன் வா. காளி கோயிலுக்குப் போகலாம். நீ வளர்த்த ஆட்டைக் காப்பாற்றித் தருகிறேன். உம்...சீக்கிரம் வா'' என்று கூறிக் கொண்டே முன்னே நடந்தார்.

''நாம் அன்பாக வளர்த்த அழகிய ஆட்டை மீட்டுத் தரப்போகிருர் அன்புத் தாத்தா'' என்ற மகிழ்ச்சியுடன், "கட்டாயம் காப்பாற்றி விட வேண்டும்'' என்று கூறிக்கொண்டே அவர் பின்னுல் ஓடினுன், பொன்னன்.

கிராமத்தின் ஒரு புறத்திலே இருந்த காளி கோயிலில் ஊர் மக்கள் நிறைந்திருந்தனர். பூசாரி உடுக்கை அடித்த வண்ணம் உரத்த குரலில் பாடிக் கொண்டிருந்தான். கோயிலின் முன் புறத்தில் பொன்னனின் ஆடு அலங்காரத்துடன் நிறுத்தப்பட்டிருந்தது. அதன் அருகே ஒருவன் வெட்டுக் கத்தியுடன் நின்று கொண்டிருந்தான். சுற்றிலும் மக்கள் இருந்தனர். முதல் வரிசையில் பண்ணைக்காரரும், 'பெரிய மனிதர்கள்' என்று கிராமத்தாரால் மதிக்கப் படும் சிலரும் நின்றுகொண்டிருந்தனர்.

'அம்மே!' என்று கத்தியது ஆடு. அது வெறும் கத்தலா? இல்லை. "உங்கள வாழ்வுக்காக என் உயிரை வாங்குவதா? நீங்களா பிறவியில் உயர்ந்த

வர்கள்? சேச்சே. மோசம், மோசம்'' என்று மக்களைப் பார்த்துக் கூறுவதுபோலவே இருந்தது.

"காளியே! கருணை நிறைந்த கடவுளே! நீ என்னை விரும்பினுயா? ஆட்டை இரக்கமற்ற புலியல்லவா கேட்கும்; நீ கேட்கலாமா?'' என்று காளியைப் பார்த்துக் கேட்பது போலிருந்தது.

அந்தச் சத்தத்தை எவரும் கேட்கவில்லை. பேசத் தெரியாத ஆட்டின் 'அம்மே' என்ற சத்தம் பூசாரியின் உடுக்கைச் சத்தத்தில் உருத்தெரியாமல் போய்விட்டது. பொன்னன் கண்ணைப் போலக் காத்து வளர்த்த ஆடு கதறிக் கொண்டிருந்தது! அதைப் பற்றிக் கவலைப்படாமல் மக்கள் பார்த்துக் கொண்டு நின்றனர்.

பாட்டுப்பாடி முடிந்ததும் "உம், ஆட்டை வெட்டுங்கள்'' என்று பூசாரி கத்தினுன். உடனே கத்தி உயர்த்தப்பட்டது. இன்னும் சிறிது நேரத்தில் ஆட்டின் தலை வேறு, முண்டம் வேருகி விடும். இரத்தம் வெள்ளமாகப் பெருகும். ஆனுல், அதற்குள் கூட்டத்தை விலக்கிக் கொண்டு முன்னே வந்த அருளப்பர், "நிறுத்துங்கள்'' என்று கத்தினுர். அவருடன் வந்த பொன்னன் ஓடிப் போய்த் தன் ஆட்டை அணைத்துக் கொண்டான்.

அருளப்பர் வேகமாகச் சென்று, வெட்டுவதற்காக நிற்கும் மனிதனிடமிருந்த கத்தியைப் பறித்துத் தூர எறிந்தார். அந்தக் கிழவரின் கைகளுக்கு எவ்வளவு சக்தி இருந்தது என்பது அப்போதுதான் தெரிந்தது.

அருளப்பரைக் கண்டதும் அனைவரும் திகைத்தனர். பூசாரியின் முகம் கோபத்தால் சிவந்தது.

"ஐயா பெரியவரே! கடவுள் காரியத்தில் தலையிட லாமா ?" என்று கேட்டான்.

அருளப்பர் பூசாரியைத் திரும்பிப் பார்த்தார். "எது கடவுள் காரியம்? எவருக்கும் எந்தத் தீங்கும் செய்யாத, குற்றமற்ற ஆட்டைப் பலியிடுகிறீர்களே, இதுவா கடவுள் காரியம்! இது கருணையற்ற மிருகம் செய்கின்ற கொடிய காரியம். பூசாரி, கொடிய காரியம் !" என்று கூறிவிட்டு மக்கள் பக்கம் திரும்பினார்.

'பொன்னிக் குப்பத்தார்களே! நான் எல்லாச் செய்திகளையும் பொன்னன் மூலம் அறிந்தேன். ஓர் ஆட்டைப் பலியிட்டால், உங்கள் குறைகள் தீர்ந்து விடும் என்று கருதுகிறீர்களா? இந்த ஆட்டின் கழுத்திலிருந்து இரத்தம் வடிந்தால், உடனே வானத்திலிருந்து மழை கொட்டும் என்று எதிர்பார்க்கிறீர்களா? ஓர் உயிரைப் பலியிடுவதால் எந்த நன்மையும் நேராது என்பதை மறக்காதீர்கள்.

அறவினை யாதெனின் கொல்லாமை; கோறல்
பிறவினை எல்லாந் தரும்.

அறச்செயல் எதுவென்றால் எந்த உயிரையும் கொல்லாமல் இருப்பதே. கொலை செய்வது எல்லாத் தீவினைப் பயனையும் தரும் என்று வள்ளுவர் சொல்லுகிறார். அதை உணருங்கள். இந்த ஆட்டைப் பலியிடாதீர்கள் !" என்று கூறினார் தாத்தா.

இதைக் கேட்டதும் மக்கள் தங்கள் தவற்றை உணர்ந்து, ஆட்டை விட்டு விட்டு, தாத்தாவைப் போற்றிப் புகழ்ந்தார்கள் என்று நினைத்துவிடாதீர்கள்! அவ்விதம் செய்யவில்லை.

பண்ணைக்காரர் முன்னால் வந்து, "ஓர் உயிரைக்

கொல்லக்கூடாது என்பதற்காக இந்தக் கிராமம் முழுவதும் மடிவதா ? பலியிடாவிட்டால் மழை பெய்யாது. பெரியவரே! நீங்கள் சற்றுத் தள்ளி நில்லுங்கள். எங்களுக்கு மழை வேண்டும். அதற்காக இந்த ஆட்டைப் பலியிடத்தான் வேண்டும்! என்ன, அப்படித்தானே?'' என்று மக்களிடம் கேட்டார் பண்ணைக்காரர்.

மழையில்லாததால், பட்டினியால் வாடிய மக்கள், ''ஆமாம், மழை வேண்டும். அதற்குப் பலியிடத்தான் வேண்டும்'' என்று கத்தினர். பூசாரியின் முகம் மலர்ந்தது. பொன்னனின் முகம் சுருங்கியது. தாத்தாவின் கோபம் பெருகியது !

அவர் இருந்த இடத்தைவிட்டு அசையவில்லை. பண்ணைக்காரர் "அருளப்பரை இப்படி ஓரமாக நிற்கச் செய்யுங்கள்'' என்ருர். உடனே ஒருவன் அருளப்பரின் அருகில் சென்ருன். அருளப்பர் அவனைப் பிடித்துத் தள்ளினர்.

பிறகு, "பண்ணைக்காரரே ! பலியிடக் கூடாது என்று சட்டம் நிறைவேறி யிருக்கிறதே, அதை மறந்துவிட்டீரா? அதை மீறினுல் தண்டனை கிடைக்கும் என்பது உங்களுக்குத் தெரியாதா ? இப்போது பலியிட்டால் நான் நேரே, போலீஸுக்குப் போய் புகார் செய்வேன். நீங்கள்தான் இதற்குக் காரணம் என்று கூறுவேன்'' என்று ஆத்திரத்துடன் கூறினர் அருளப்பர்.

பண்ணைக்காரரைப் பயம் பிடித்துக் கொண்டது. சட்டம், தண்டனை என்றதும் அவர் உள்ளம் நடுங்கியது. 'நம் கிராமத்தில்தானே பலியிடப் போகிருேம் !

அரசாங்கத்தாருக்கு எப்படி இது தெரியப் போகிறது' என்று நினைத்துத்தான் இந்தச் செயலில் அவர் இறங்கினர். ஆனால், அருளப்பர் இப்படித் திடீரென்று வந்து சேருவார் என்று எதிர்பார்க்கவில்லை. அருளப்பருக்கு எங்கும் செல்வாக்கு உண்டு. அவர் சொன்னபடி நடக்க அதிகாரிகள் காத்துக் கொண்டிருப்பார்கள்—இவை பண்ணைக்காரருக்குத் தெரியும். அதனால், உடனே பலியிடுவதை நிறுத்திவிடும்படி கூறினர்.

பொன்னனின் ஆடு தப்பியது; மக்கள் முணு முணுத்தவண்ணம் கலைந்தனர். பூசாரிதான் பலி நின்று விட்டதற்காக மிகவும் வருத்தப்பட்டான். அவனுக்கு அருளப்பர் மீது அடக்கமுடியாத கோபம். அருளப்பர் பொன்னனுடன் அவன் வீட்டிற்குச் சென்றார்.

* * *

இரவு மணி ஒன்பதுக்கு மேலிருக்கும். பொன்னன் அருளப்பருக்காக, வேறொருவர் வீட்டிலிருந்து பால் வாங்கிக் கொண்டு பண்ணைக்காரர் வீட்டின் வழியாக வந்து கொண்டிருந்தான். பண்ணைக்காரரின் வீட்டுத் திண்ணை மேல் பலர் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் பேச்சில் அருளப்பரின் பெயர் கேட்டது. எனவே பொன்னன், அவ்வீட்டின் அருகில் மறைந்து நின்றான்; அவர்கள் பேசுவதையும் கேட்டான். வானத்தில் நிலா இல்லை; எங்கும் இருள்! திண்ணையில் மட்டும் சிறு விளக்கு இருந்தது. அதனால், மறைந்து நிற்கும் பொன்னனை மற்ற ஊர்கள் பார்க்கவில்லை.

திண்ணையில் பண்ணைக்காரர், பூசாரி, இன்னும் பலர் இருந்தனர்.

"பலி கொடுத்திருந்தால், இப்பொழுது மழை பெய்து கொண்டிருக்கும்" என்ருன் பூசாரி.

"மழை இல்லாவிட்டால் எல்லோரும் சாக வேண்டியதுதான்" என்ருன் ஒருவன்.

"அருளப்பர் இங்கிருக்கும் வரையில் பலியிட முடியாதே?"—பண்ணைக்காரர் வருத்தத்துடன் கூறிஞர்.

"அவரை விரட்டிவிடுவது. இங்கிருந்து போக மறுத்தால், மூர்ச்சையாகும் வரை அடித்து, பிறகு இழுத்துக் கொண்டு போய் எங்காவது போட்டு விடுவது" என்ருன் வேருெருவன்.

"ஆமாம், பண்ணைக்காரரே, யோசிக்காதீர். இல்லையென்ருல் கிராமமே அழிந்துவிடும். அதனுல் பாவமே இல்லை! ஆண்டவன் காரியம்! அதுவும் மக்களின் நல்வாழ்வுக்காக" என்ருன் பூசாரி.

"உடனே புறப்படுவோம்! பொன்னன் வீட்டில் தான் அவர் இருக்கிருர்" என்ருன் இன்னெருவன்.

இதற்குமேல் கேட்டுக்கொண்டு நிற்கவில்லை பொன்னன். உடனே, அந்த இடத்தைவிட்டுத் தன் வீடு நோக்கி ஓடினுன்; செம்பிலிருந்த பால் தளும்பிக் கீழே கொட்டிக் கொண்டிருந்தது. அதைப் பற்றிக் கவலைப்படாமல், திண்ணையிலிருந்தவர்களின் கண்களில் படாமல் சுற்று வழியில் ஓடினுன் பொன்னன்.

தன் வீட்டை அடைந்தான்; திண்ணையிலிருந்த அருளப்பர், "பொன்னு, ஏன் இப்படி ஓடிவருகிருய்?" என்று கேட்டார். பொன்னன் மூச்சு வாங்க, தான்

கேட்டதைக் கூறிவிட்டு, “தாத்தா, உடனே ஓடிப் போய்விடுங்கள்” என்ருன்.

அருளப்பர் சிரித்தார். “பயப்படாதே பொன்னு! எனக்கு எந்த ஆபத்தும் வராது” என்ருர். உள்ளே யிருந்த பொன்னனுடைய அப்பாவின் காதில் பொன்னன் கூறியவை அரை குறையாக விழுந்தன. அவர் வெளியே ஓடி வந்தார். “என்ன? என்ன விஷயம்!” என்று கேட்டார். அருளப்பர் “ஒன்றுமில்லை” என்று கூறி முடிக்கும் முன்பே அந்த வீட்டின் முன்னுல் ஒரு சிறு கூட்டம் வந்து நின்றது.

அருளப்பர் கூட்டத்தினரை நெருங்கினுர். “நண்பர்களே! நீங்கள் என்னைத்தானே தேடி வந்தீர்கள்? இதோ நிற்கிறேன். உங்கள் விருப்பப்படி என்ன வேண்டுமானுலும் செய்யுங்கள். ஆத்திரம் அறிவை மறைக்கும் என்பதை நீங்கள் உண்மையாக்குகிறீர்கள். என்னை விரட்டினுல், நான் உங்களைப் பற்றிப் போலீசாரிடம் கூற மாட்டேனு? என்னைக் கொன்று விட்டால், உங்களைச் சும்மா விட்டு விடுவார்களா? அதனுல் மழை பெய்யுமா? மழை இயற்கையின் நியதிப்படி பெய்வது! அதை ஓர் ஆடல்ல; ஓராயிரம் ஆடுகள் பலி யிட்டாலும் பெற முடியாது” என்று கூறினுர்.

மக்கள் அவர் வார்த்தைகளில் மயங்கிவிடப் போகிருர்களே என்று பூசாரி எண்ணினுன். ஆகையால், “உம்! ஏன் தயங்குகிறீர்கள். நமக்கு மழை தேவை! அதற்குப் பலி அவசியம். அதற்குத் தடை இந்தமனிதர். அடித்துக்கொல்லுங்கள்” என்ருன். ஆத்திரம் கொண்ட மக்கள் அவர் மீது பாய நினைத்தனர்.

ஆனல், நினைத்ததைச் செய்யவில்லை.

காரணம் என்ன தெரியுமா? திடீரென்று இருளைக் கிழித்துக்கொண்டு மின்னல், ‘பளிச் பளிச்’ என்று மின்னியது. மக்கள் வானைப் பார்த்தனர். சில விநாடிகளில் இடியின் ஒலி அவர்கள் காதுகளைத் துளைத்தது. எல்லோரும் மகிழ்ச்சியுடன், வானையே பார்த்துக் கொண்டிருந்தனர். சில நிமிஷங்களில், கிராமத்தார் ஆவலோடு எதிர்பார்த்த—பலியிட்டால் தான் வருமென்று நினைத்த—மழை வந்துவிட்டது! ‘சோ’ என்று மழை பெய்தது. பலியிடாமலே மழை வெகு நேரம் பெய்தது.

அனைவரும், “அருளப்பரே! எங்களை மன்னித்து விடுங்கள்! பலியிடுவதற்கும், மழை பெய்வதற்கும் சம்பந்தமில்லை என்பதை இப்போதுதான் உணர்ந்தோம். அறிவிழந்து உங்களைக் கொல்ல வந்த எங்களை மன்னித்து விடுங்கள்” என்றனர். ஆனல், பூசாரி மட்டும் அந்த இடத்தைவிட்டு மெல்ல நழுவி விட்டான்.

அருளப்பர், “நண்பர்களே! உங்கள் அறியாமை ஒழிந்ததற்காக மகிழ்கிறேன். நீங்கள் பலியிட்டிருந்தால், இப்போது பலி கொடுத்ததால்தான் மழை பெய்தது என்று கூறுவீர்கள். அப்புறம், மழை பெய்யாத போதெல்லாம் ஆடுகளைச் சாகடிப்பீர்கள். இப்போது நீங்கள் உண்மையை உணர்ந்ததற்கு மகிழ்ச்சி. சரி, சீக்கிரம் போங்கள், வயலில் உடைந்திருக்கும் வரப்புக்களைச் சரி செய்யுங்கள். வேலையைக் கவனியுங்கள்” என்ருர்.

உடனே மக்கள், "அன்புத் தாத்தா வாழ்க!" என்று கூறிக்கொண்டே தங்கள் வேலையைக் கவனிக்க ஓடினர். பொன்னனின் அப்பாவும் தன் வயலை நோக்கி மண்வெட்டியுடன் போய்விட்டார்.

அருளப்பர் பொன்னனைப் பார்த்தார். அவன், "தாத்தா! நீங்கள் அன்புத் தாத்தா! அருமைத் தாத்தா! உங்களால் இந்தக் கிராமம் அறிவு பெற்றது! என் ஆடும் பிழைத்தது!" என்முன்.

தோட்டத்திலே மழையில் நனைந்துகொண்டிருந்த ஆடு, 'அம்மே' என்று கத்திக்கொண்டே அங்கு ஓடி வந்தது. அந்த ஆட்டின் 'அம்மே' சத்தம் பொன்னன் கூறுவதை 'ஆமாம்' என்று ஆமோதிப்பதுபோலிருந்தது!

# நிலாவின் சிரிப்பு

மொட்டை மாடியில் உட்கார்ந்தபடி வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தேன். என் உள்ளத்தில் பொங்கித் ததும்பிக் கொண்டிருந்த மகிழ்ச்சியை அந்த நிலா எப்படியோ தெரிந்து கொண்டிருக்க வேண்டும். அதனால்தான் அது என்னைப் பார்த்துக் சிரிப்பதாகத் தெரிந்தது. ஆமாம். நிலா என்னைப் பார்த்துச் சிரித்தது!

என் மகிழ்ச்சிக்குக் காரணம் என்ன தெரியுமா? என்னிடம் ஒரு ரூபாயும் எட்டணாவும்இருந்ததுதான். நாளை மாலை 'ஏமாற்றம்' என்னும் அற்புதமான படத்திற்கு ஒன்றேகால் ரூபாய் டிக்கெட்டில் செல்லப் போகிறேன். அந்தப் படம் பல வாரங்கள் வெற்றிகர மாக ஓடிக்கொண்டிருந்தது! என்றாலும் இதுவரை என்னால் பார்க்க முடியவில்லை. நாளை பார்த்து விடு வேன். மீதமுள்ள கால்ரூபாயை என் இஷ்டப்படி செலவு செய்வேன். எவ்வளவு நாளாகச் சேர்த்து வைத்த பணம்! நாளை என் வாழ்க்கையிலே ஒரு பொன்னான நாள். சந்தேகமே இல்லை.

இப்படி எண்ணியதும், என்னை அறியாமலேயே சிரித்தேன். மேலே, வானத்தில் பவனி வந்த நிலா வும் சிரித்தது.

பொழுது விடிந்தது!

"கண்ணா! கண்ணா!"

படுக்கையை விட்டு எழுந்திருப்பதற்கு முன்பே என் அக்காள் என்னை அழைத்தாள். நான் இருந்த இடத்தைவிட்டு அசையாமல், "என்ன ?" என்று கூவினேன். அக்கா என்னிடம் வந்தாள். ரகசியக் குரலில், "கண்ணு, உன்னிடம் எட்டணு இருந்தால் கொடுடா! நாளைக்குக் கொடுத்துவிடுகிறேன். 'கலாவாணி' பத்திரிகை வாங்க வேண்டும்" என்று கேட்டாள்.

என்னிடம் பணம் இருந்தது. ஆனல், நான் கொடுத்து விடுவேனு? "என்னிடம் தம்படிகூட இல்லை" என்று கூறிவிட்டேன்.

மணி பத்து இருக்கும்.

அப்பா வந்தார். "கண்ணு, பள்ளிக்கூடம் போக வில்லையா?" என்று அன்போடு கேட்டார். "இன்று சனிக்கிழமை. விடுமுறை!" என்று சுருக்கமாகச் சொன்னேன்.

"கண்ணு, நீ ஏதாவது காசு சேர்த்து வைத்திருக் கிருயா? வைத்திருந்தால் ஒரு ரூபாயாவது, எட்டணு வாவது கொடு. நாளை மறுநாள் முதல் தேதி. அன்று எட்டணு அதிகமாகப்போட்டு உன் காசைத் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்" என்று கேட்டார்.

"அப்பா, நீங்கள் கொடுக்கிற காசில் சேர்த்துக் கூட வைக்க முடியுமா? என்னிடம் காலணுக்கூட இல்லை" என்று கூறிவிட்டேன். அப்பா "சரி" என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

மாலை ஐந்து மணி.

நான் சட்டையை மாட்டிக்கொண்டு சினிமாவுக் குச் கிளம்பத் தயாரானேன். வாசலில் ஏதோ சத்தம்

கேட்டது. எட்டிப் பார்த்தேன். அம்மாவிடம் காய கறி விற்பவன் ஏதோ தகராறு செய்துகொண்டிருந் தான். "என்னம்மா இது சத்தம்?" என்று கேட் டேன்.

"கண்ணா, காலையில் இவனிடம் நாலணாவுக்குக் காய்கறி வாங்கினேன். சாயங்காலம் பணம் கொடுப்ப தாகச் சொன்னேன். இன்றைக்கு உன் அப்பா காலணாக்கூடத் தரவில்லை. நாளைக்குப் பணம் தரு கிறேன் என்றால் கேட்காமல் சத்தம் போடுகிறான். உன்னிடம் ஒரு நாலணா இருந்தால் கொடுக்கிறாயா? அப்பா வந்ததும் வாங்கித் தருகிறேன்" என்று கேட் டாள் அம்மா.

என் மனம் இளகவில்லை. "என்னிடம் ஏதம்மா பணம்?" என்று கூறிவிட்டு வெளியே புறப்பட் டேன். நேராக சினிமாக் கொட்டகைக்குச் சென் றேன். அங்கே பத்தணா டிக்கெட் எளிதாகக் கிடைத் தது. என்றாலும், நான் அதை வாங்கவில்லை. ஒரு ரூபாய் நாலணா டிக்கெட் விற்குமிடத்திற்குச் சென் றேன். டிக்கெட் தருபவனிடம், "ஒரு டிக்கெட் கொடு" என்று கூறிக்கொண்டே என் சட்டைப் பையில் கையைவிட்டேன். எனக்கு 'பகீர்' என்றது. முழு அரை ரூபாய் மட்டும் இருந்தது. ஒரு ரூபாய் நோட்டைக் காணவில்லை. தேடித் தேடிப் பார்த் தேன்; கிடைக்கவில்லை.

டிக்கெட் தருபவர் ஒரு டிக்கெட்டைக் கிழித்து என்னிடம் நீட்டினார். நான், "மன்னிக்க வேண்டும். என் பணத்தைக் காணோம்!' என்று கூறி, அந்த இடத்தைவிட்டு வெளியே வந்தேன். ஒரு ரூபாய்

எங்கேயோ, மாயமாக மறைந்துவிட்டது. சட்டைப் பையில் இருந்த கைக்குட்டையை நான் அடிக்கடி எடுத்துக் கொண்டிருந்தேன். அப்போது ரூபாய் நோட்டும் வெளியிலே வந்து, எங்கேனும் விழுந் திருக்க வேண்டும்!




இப்போது என்ன செய்வது? பத்தணா டிக்கெட் வாங்கக்கூடக் காசில்லை. ஆறணா டிக்கெட் வாங்கலாமா என்று யோசித்தேன். சற்று முன்னால் பத்தணா

டிக்கெட் வாங்கக்கூடாது என்று நினைத்தேன் நான். ஆனால், இப்போது ஆறணா டிக்கெட் வாங்கச் சென்றேன். ஆறணா டிக்கெட் தரும் இடத்தில், 'நிறைந்து விட்டது'என்னும் பலகை தொங்கிக்கொண்டிருந்தது!

பேசாமல் வெளியே வந்தேன். கொட்டகையை விட்டுச் செல்லாமல், உள்ளேயும் போகமுடியாமல் வெளியே நின்றுகொண்டிருந்தேன். அப்போது ஒருவன் என் அருகே வந்து, "தம்பி, டிக்கெட் வேணுமா? ஆறணா டிக்கெட் எட்டணா" என்றான்.

உடனே என் முகம் மலர்ந்தது. கொஞ்சங்கூட யோசிக்காமல் என்னிடமிருந்த எட்டணாவை அவனிடம் கொடுத்துவிட்டு, அவன் கொடுத்த டிக்கெட்டை வாங்கிக்கொண்டு கொட்டகைக்குள் ஓடினேன்.

கொட்டகையில் டிக்கெட் வாங்குபவரிடம் டிக்கெட்டைக் கொடுத்தேன். 'அப்பாடா! இனிமேல் நிச்சயம் படத்தைப் பார்த்து விடலாம்' என்று எண்ணி மகிழ்ந்தேன்.

அப்போது, "தம்பி, இந்த டிக்கெட்டை நீ எங்கே வாங்கினாய்?" என்று கேட்டார் டிக்கெட் வாங்குபவர்.

"ஏன்? என்ன விஷயம்?" என்று கலவரத்துடன் கேட்டேன்.

அவர், "இது நேற்று விற்ற டிக்கெட். இன்று செல்லாது. உன்னை எவனோ ஏமாற்றிவிட்டான்" என்று கூறிக்கொண்டே நான் கொடுத்த டிக்கெட்டை என்னிடம் திருப்பிக் கொடுத்தார்.

அதை வாங்கிக்கொண்டு வருத்தத்துடனும், வெட்கத்துடனும், அவமானத்துடனும் வெளியே

வந்தேன். வெளியே என்னிடம் டிக்கெட் விற்றவன் இருக்கிருனு என்று பார்த்தேன். அவன் என்ன, பைத்தியக்காரனு அங்கேயே நிற்க? என் கையிலிருந்த செல்லாத டிக்கெட்டைக் கோபத்துடன் கிழித்துப் போட்டுவிட்டு அங்கிருந்து புறப்பட்டேன்.

எங்கெங்கோ சுற்றினேன். இரவு ஏழு மணி இருக்கும். ஒன்றரை ரூபாயுடன் உற்சாகத்தோடு வெளியே சென்ற நான், அவ்வளவு பணத்தையும் இழந்துவிட்டு, வருத்தத்தோடு, சோர்வோடு, கால் நோவோடு வீடு திரும்பினேன்.

அக்காள் என்னைப் பார்த்தாள். உடனே என்னிடம் ஓடி வந்தாள். "கண்ணு, பக்கத்து வீட்டுப் பங்கஜம் எனக்கு ஒரு ரூபாய் தர வேண்டும். அதைக் கொடுத்து விட்டாள். நான் 'கலாவாணி' வாங்கிக் கொண்டேன். கடையில் உனக்குப் பிடித்தமான குழந்தைப் பத்திரிகை 'மல்லிகை'யும் வந்திருந்தது. அதையும் வாங்கிக்கொண்டு வந்தேன். இந்தா" என்று 'மல்லிகை'யை நீட்டினுள்.

நான் அவள் முகத்தைப் பார்த்தேன். அதில் அன்பு நிறைந்திருந்தது. நான் ஒன்றும் கூருமல் 'மல்லிகை' யை வாங்கிக்கொண்டேன்.

அப்பா உள்ளேயிருந்து என்னை அழைப்பது கேட்டது. அவரிடம் சென்றேன். "கண்ணு, இன்று ஆபீசில் ஐந்து ரூபாய் கடன் வாங்கினேன். உனக்கு முதல் தேதி வாங்கித் தருவதாகச் சொன்னேனே, கலர் பென்சில், அதையும் வாங்கி வந்தேன். உன் மேஜை மேல் இருக்கிறது. எடுத்துக்கொள்" என்ருர்.

"சரியப்பா" என்று கூறிவிட்டு நேராக மொட்டை மாடிக்குச் சென்றேன். ஒரு மூலையில் உட்கார்ந் தேன். காலையிலிருந்து நடந்தவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

அப்போது அம்மா, "கண்ணு" என்று அழைத் துக்கொண்டே மாடிக்கு வந்தாள்.

"காபி சாப்பிடாமலே சாயங்காலம் வெளியே போய்விட்டாயே! காபி ஆறிப் போச்சு. நீ வந்ததும் சூடு பண்ணிக்கொண்டு வந்தேன். சாப்பிடு கண்ணு" என்று பாசத்தோடு காபிக் குவளையை என் னிடம் நீட்டினாள். அம்மாவின் அன்பையும் என் இரும்பு இதயத்தையும் நினைத்துப் பார்த்தேன்.

அம்மா கீழே போய்விட்டாள். அக்கா, அப்பா, அம்மா அனைவரும் என்னிடம் எவ்வளவு அன்பாக இருக்கிறார்கள். நான் அவசர நேரத்தில்கூட அவர் களுக்கு உதவ மறுத்தேன். அதற்குத் தகுந்த தண் டனை கிடைத்துவிட்டது. அவர்களுக்கு உதவாத பணம் எனக்கும் உதவவில்லை.

இவ்வளவு நேரம் பணம் வீணானதே என்று வருந்தின நான், "அது வீணாகவில்லை. எனக்கு நல்ல நடத்தையைக் கற்பித்தது. தகுந்த தண்டனையும் கொடுத்துவிட்டது" என்று திருப்தி அடைந்தேன். 'இனி நானும் அப்பா, அம்மா, அக்காள் முதலிய வர்களைப் போலவே அன்பாக நடந்து கொள்வேன். என்னால் முடிந்த உதவிகளை யெல்லாம் செய்வேன்' —இப்படி முடிவு செய்துகொண்டு வானத்தைப் பார்த்தேன். என் முடிவை ஆதரிப்பதைப்போல நிலா என்னைப் பார்த்துச் சிரித்தது!

# ஆயிரம் ரூபாய்

**மாலை** மணி ஐந்து இருக்கும்.

நகரத்திலிருந்து கிராமத்தை நோக்கிச் செல்லும் பாதையில் முத்துவும், கோபாலனும் சென்றுகொண்டிருந்தனர். இருவரும் இணைபிரியாத நண்பர்கள். ஒன்பதாம் வகுப்பில் படிப்பவர்கள். கிராமத்தில் உயர் நிலைப்பள்ளி இல்லாததனால், நகரத்தில் உள்ள பள்ளியில் படித்து வந்தனர்

அவர்கள் நகரத்தின் அருகில் நடந்துகொண்டிருந்தனர். கிராமத்திற்கு இன்னும் வெகு தூரம் செல்ல வேண்டும்.

''முத்து, நமது ராமுவைப் பார்த்தாயா? அவன் இன்று காரிலே வந்து இறங்கினான். நாம் கூடப் பெரிய பணக்காரர்களாக இருந்தால், காரிலே வரலாம்'' என்றான், கோபாலன்.

"ஆமாம், கார்கூட வேண்டாம். ஆளுக்கொரு சைக்கிள் இருந்தாலும் போதுமே!' என்றான் முத்து.

"முத்து," கதைகளில் திடீரென்று ஏழைகள் பணக்காரர்களாகிறார்கள்! எதிர்பாராத விதமாய் சிலருக்குப் புதையல் கிடைக்கிறது! நமக்கும் அப்படி ஒரு புதையல் கிடைத்தால் எவ்வளவு நல்லது!''— கோபாலன் சொன்னான்.

"நல்லதுதான்! யார் இல்லை என்று சொன்னது? ஆனால் கிடைக்கவேண்டுமே!'' என்று பதிலளித்தான் முத்து.

அவர்கள் நடந்து சென்ற பாதையின் இரு புறமும் அடர்ந்த புதர்களிருந்தன. முத்து ஒரு புறத்திலிருந்த புதர்களைப் பார்த்தவாறு நடந்தான் திடீரென்று, “கோபால், அதோ அது என்ன?” என்று ஒரு புதரைச் சுட்டிக் காட்டினன்.

முத்து காட்டிய இடத்தைப் பார்த்தான் கோபாலன். அவன் கண்களையே நம்ப முடியவில்லை! அந்தப் புதர் அருகில் ஒரு கட்டு நோட்டுக் கிடந்தது!

“முத்து, கரன்ஸி நோட்டுப் போலிருக்கிறதே!” என்று ஆச்சரியத்துடன் சொன்னன் கோபாலன்.

“போல என்ன? அதுவேதான்!” என்ருன் முத்து.

கோபாலன் பாய்ந்து சென்று அதை எடுத்துக் கொண்டான். மீண்டும் பாதைக்கு வந்தான். யாராவது பார்க்கிருர்களா என்று சுற்று முற்றும் பார்த்தான். சிறிது தூரத்தில் யாரோ ஒருவர் வந்து கொண்டிருந்தார். உடனே, நோட்டுக் கட்டை மறைத்துக்கொண்டு முத்துவின் கையைப் பிடித்து இழுத்தவாறு வேகமாய்ச் சென்ருன்.

சிறிதுதூரம் வந்ததும், ஒரு பெரிய ஆலமரம் இருந்தது. அதனடியில் இருவரும் உட்கார்ந்தனர். கோபாலன் பாதையைப் பார்த்தான். அங்கு எவருமே இல்லை. உடனே, மறைத்துவைத்த நோட்டுக் கட்டை எடுத்துப் பார்த்தான்.

ஒரு கட்டு நோட்டு! அவ்வளவும் புத்தம் புதிய பத்து ரூபாய் நோட்டுக்கள்! அந்தக் கட்டில் நூறு நோட்டுக்கள் இருந்தன! புதையல் கிடைக்குமா என்று பேசிக்கொண்டு வந்தவர்களுக்கு ஆயிரம் ரூபாய் கிடைத்திருக்கிறது!

“முத்து, உண்மையில் நாம் அதிர்ஷ்டசாலிகள்! ஆயிரம் ரூபாய் கிடைத்திருக்கிறது!”

“ஆமாம், அவ்வளவும் பத்து ரூபாய் நோட்டுக்கள்! நாம் செலவழிப்பதற்கு ஏற்றவாறு கிடைத்திருக்கிறது. நூறு ரூபாய் நோட்டாக இருந்திருந்தால் நம்மால் மாற்ற முடியாது.”

“இதைஎன்ன செய்யலாம்?”

“முதலில் இரண்டு சைக்கிள் வாங்கி விடலாம். மிச்சப் பணத்திற்குக் கடை வீதிக்குப் போய் வேண்டியதை வாங்கிக் கொள்ளலாம்.”

“ஆமாம். அப்புறம் நல்ல சினிமாப் பார்க்கலாம். அதுவும் இரண்டரை ரூபாய் டிக்கட்டிலே ராஜாமாதிரி உட்கார்ந்து பார்க்கவேண்டும்.”

இருவரும் ஆயிரம் ரூபாயை எப்படி எப்படியெல்லாம் செலவழிப்பது என்று திட்டம் போட்டனர். ஆனல், திடீரென்று கோபாலனுக்கு ஒரு சந்தேகம் தோன்றிவிட்டது. “இந்தக் கட்டு புதிதாக இருக்கிறதே! இதை இழந்தவர், நோட்டின் எண்களைக் குறித்து வைத்திருந்தால் ....?” என்ருன்.

“அதெல்லாம் நூறு ரூபாய் நோட்டுக்குத்தான் செய்வார்கள்” என்ருன் முத்து.

“எதற்கும் இரண்டு நாட்கள் பொறுத்துச் செலவழிப்போமே” என்று யோசனை சொன்ஞன், கோபாலன்.

அன்று வெள்ளிக்கிழமை. சனி, ஞாயிறு ஆகிய இரண்டு நாட்களிலும் பள்ளியில்லை. அதனுல் பணத்தைத் திங்கட்கிழமை செலவழிக்க முடிவு செய்தனர்.

அதுவரை பணத்தை யார் வைத்திருப்பது? "என்னிடம் வேண்டாம். என் அண்ணன் என்னுடைய பை, மேஜை அறை, பெட்டி எல்லாவற்றையும் அடிக்கடி ஆராய்ந்து பார்ப்பார். அவரிடம் இந்த ஆயிரம் ரூபாய் சிக்கிக் கொள்ளும்" என்ருன் கோபாலன்.

"என் வீட்டில் மட்டுமென்ன! யாரும் என் பையைப் பார்க்கமாட்டார்களா? அப்படிப் பார்த்து எடுத்துவிட்டால் நான் உன்னிடம் என்ன பதில் சொல்வது? என் அப்பாவுக்குத் தெரிந்தால் ஆபத்து!" என்ருன் முத்து.

பணத்தை எங்கே பாதுகாத்து வைப்பது? இருவரும் பலமாக யோசித்தனர்.

"முத்து, நான் ஒன்று சொல்கிறேன்; கேட்கிருயா?" என்ருன் கோபாலன்.

"என்ன? சீக்கிரம் சொல்"

"அதோ, அங்கே ஒரு பாழடைந்த கிணறு இருக்கிறதல்லவா?"

"ஆமாம், அதற்கென்ன?"

"அதில் கொஞ்சம்கூடத் தண்ணீர் கிடையாது. அடியில் வெறும் கற்களாகவே இருக்கின்றன. சுலபமாக நான் இறங்கிவிடுவேன். அங்கே ஒரு பெரிய கல்லுக்கு அடியிலே நம் பணத்தை மறைத்து வைப்போம். திங்கட்கிழமை காலை எடுத்துக் கொள்ளலாம்."

"நல்ல யோசனை கோபால். உம் புறப்படு."

உடனே இருவரும் புறப்பட்டனர். அங்கிருந்து ஒரு பர்லாங் தூரத்தில் ஒற்றையடிப் பாதைக்கு அருகில் இருந்த பாழுங் கிணற்றை அடைந்தனர்.

கோபாலன் கிணற்றில் இறங்கினான். இறங்கியதும் மேலே நின்றுகொண்டிருந்த முத்து, நோட்டுக் கட்டைக் கீழே போட்டான். கோபாலன் அதை அப்படியே இரு கையாலும் பிடித்துக்கொண்டான். பிறகு, கிணற்றிலிருந்த ஒரு பெரிய கல்லின் அடியில் மறைத்து வைத்தான். அடையாளம் தெரிவதற்காக அந்தக் கல்லின்மேல் தன் பேனாவிலிருந்த மையைக் கொட்டி வைத்தான். பிறகு, மேலே வந்துவிட்டான்.

திங்கட்கிழமை காலை பள்ளிக்கூடம் போகும் போது, அங்கு வந்து பணத்தை எடுத்துக்கொள்வது என்று இருவரும் முடிவு செய்தனர். அதன் பின் இருவரும் மகிழ்ச்சியுடன் வீட்டைநோக்கி நடந்தனர்.

அடுத்த இரண்டு நாட்களிலும் முத்துவும், கோபாலனும் சதா ஆயிரம் ரூபாயைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தனர். 'சைக்கிள் வாங்கலாமா? நாம் போனால் சைக்கிள் தருவார்களா? வீட்டில் சைக்கிள் ஏது என்று கேட்டால் என்ன சொல்வது? ஆயிரம் ரூபாயில் கொஞ்சம் ஏழைகளுக்குக் கொடுக்கலாமா?' —இப்படிப் பலப்பல யோசனைகள்.

கடைசியாக அவர்கள், எதிர்பார்த்த திங்கட்கிழமை வந்தது. பத்து மணிக்குத்தான் பள்ளிக்கூடம். ஆனால், அன்று இருவரும் ஆறு மணிக்கெல்லாம் பள்ளிக்குச் செல்லத் தயாராக இருந்தனர். அவர்கள் வீட்டிலுள்ளவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. 'ஏன் என்றுமில்லாமல் இவ்வளவு அவசரப்படுகின்றனர்?' என்று எண்ணினர். அவர்களுக்குத் தெரியுமா ஆயிரம் ரூபாய் கிணற்றுக்கு உள்ளே உட்கார்ந்துகொண்டிருக்கிற விஷயம்!

காலை எட்டு மணிக்கெல்லாம் புத்தகங்களை எடுத்துக்கொண்டு, அப்பாவிடம் போனான் முத்து. "அப்பா, நான் பள்ளிக்குப் போகிறேன்" என்றான்.

"இதற்குள் என்னடா அவசரம்? மணி எட்டுத்தானே! இன்றைக்கு நான்கூட நகரத்துக்கு வரப் போகிறேன். வண்டி கட்டச் சொல்லியிருக்கிறேன். இருவரும் வண்டியில் போகலாம்" என்றார் அப்பா.

"அப்பா, கோபாலன் என்னைவிட்டுத் தனியாகப் போகமாட்டானே! நான் அவனுடன் போகிறேன்" என்றான் முத்து.

உடனே அப்பா, "சரி, கோபாலனும் வண்டியில் வரட்டுமே! நம் வண்டி நகரத்துக்குப் போகும்போது



நீங்கள் நடந்தா போவது? தினமும்தான் நடக்கிறீர்களே! இன்ருவது வண்டியில் போகலாம்" என்ருர் அப்பா.

அப்பாவை மேலும் வற்புறுத்த முடியாது என்பதை அறிந்தான் முத்து. உடனே கோபாலனிடம் சென்று செய்தியைக் கூறினுன். "என்ன செய்வது? உன் அப்பாவுடன் வண்டியில் போக வேண்டியது தான்" என்று கோபாலனும் சம்மதித்தான்.

அன்று மாட்டுவண்டியில் கோபாலனும், முத்துவும் சென்றனர். வண்டி ஆலமரத்தை அடைந்ததும், இருவரும் ஒருவரைப் பார்த்து ஒருவர் அர்த்தத்துடன் சிரித்தனர். இவ்வளவுக்கும் வண்டியிலிருந்து பார்த்தால், பாழுங் கிணறு தெரியவே தெரியாது!

அன்று மாலை!—

பள்ளி முடிந்ததும், முத்துவும் கோபாலனும் நேராகப் பாழுங் கிணற்றை நோக்கி நடந்தனர். அந்த இடத்திற்கு அவர்கள் வந்துவிட்டனர். ஆனுல், அங்கே......?

பாழுங் கிணற்றையே காணவில்லை! இருவருக்கும் ஒன்றுமே புரியவில்லை! "கிணறு எங்கே போயிற்று? இதென்ன கனவா; நினைவா!" என்று குழம்பினர்.

"முத்து, நாம் ஏமாந்துவிட்டோம். ஆயிரம் ரூபாயை அநியாயமாக இழந்துவிட்டோம்" என்று வாய்விட்டுக் கதறினுன், கோபாலன்.

"என்ன கோபால்! என்ன நடந்தது? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே!" என்று கேட்டான் முத்து.

"முத்து, இங்கிருந்த பாழுங் கிணற்றை மூடி விட்டனர். இதோ பார், வட்டமாகப் புதியமண் தெரி கிறது" என்று காட்டினுன் கோபாலன்.

இருவர் முகங்களிலும் ஏமாற்றமும், வருத்தமும் குடிகொண்டன.

காலையில் மலர்ந்த தாமரைகளைப்போல் மகிழ்ச்சி யுடன் சென்றனர் இருவரும். ஆனால், மாலையிலோ கசங்கிய மலர்களைப் போல வாடிய முகத்துடன் வீடு திரும்பினர்.

இரவு மணி ஏழு இருக்கும்!

தினமும் முத்துவின் வீட்டுக்குப் பத்திரிகை வரு வது வழக்கம். முத்து அன்றையப் பத்திரிகையை எடுத்துக்கொண்டு கோபாலனிடம் ஓடினுன்.

"கோபால், நாம் ஆயிரம் ரூபாய் போனதற்காக வருத்தப்படவே தேவையில்லை. மகிழ்ச்சியடைய வேண்டும்!" என்ருன்.

கோபாலன் பத்திரிகையை வாங்கி, முத்து காட் டிய இடத்தில் பார்த்தான்.

"பாழுங்கிணறு மூடப்பட்டது" என்ற தலைப்பில் பொதுமக்களின் வேண்டுகோளின்படி நகரத்துக்கு அருகே, ஒற்றையடிப் பாதையில் அபாயகரமான இடத்தில் இருந்த பாழுங் கிணற்றை முனிஸிபா லிடியார் மூடிவிட்டதாகச் செய்தி வெளியாகி யிருந்தது.

அதன் கீழிருந்த மற்ரெரு செய்தியைப் படித்த தும் கோபாலன் திடுக்கிட்டான். திரும்பவும் ஒருமுறை அதைப் படித்தான்:

'நகரில் கள்ள நோட்டு

ஆகஸ்டு, 20—

நேற்று பிற்பகல் கள்ள நோட்டு அச்சடிக்கும் கந்தசாமி பிடிபட்டான். ஆனால், பிடிபட்டபோது அவனிடம் நோட்டுக்கள் இல்லை. போலீஸார் மிரட்டிக் கேட்ட பிறகுதான், கிராமத்திற்குச் செல்லும் பாதையின் ஓரத்திலுள்ள புதரில் போட்டதாகக் கூறினான். அவன் கூறிய இடத்தில் நோட்டுக்களிருந்தன. தற்போது கந்தசாமி காவலில் வைக்கப் பட்டிருக்கிறான். வழக்கு விசாரணை விரைவில் நடக்கும்.'

இதைப் படித்ததும் கோபாலன் முத்துவைப் பார்த்தான். "கோபால், அவசரத்திலே அவன் புதரில் நோட்டுக் கட்டுகளைப் போட்டிருக்கிறான். அப்போது ஒன்று தவறி வெளியில் விழுந்துவிட்டிருக்கிறது. அதுதான் நம் கையில் சிக்கியது! நல்ல வேளை, அது பாழுங்கிணற்றில் அகப்பட்டுக்கொண்டது! இல்லையென்றால் அதை மாற்றப் போய் நாமும் மாட்டிக் கொண்டிருப்போம்" என்றான் முத்து.

"ஆமாம், முத்து! நல்ல வேளை; தப்பித்தோம்!" என்று மகிழ்ச்சியுடன் கூறினான் கோபாலன்.

கண்டெடுத்த ஆயிரம் ரூபாய் கை நழுவிப் போய் விட்டதே என்று முதலில் வருத்தப்பட்டவர்கள், முடிவில் அதற்காக சந்தோஷப்பட்டனர்.

# நிழலின் அருமை

"அக்கா!"

"என்னடா, முத்து?"

"பள்ளிக்கூடத்துக்கு நேரமாகிவிட்டது. நான் போகட்டுமா?"

"இன்றைக்கு ஏன் இவ்வளவு சீக்கிரமாகப் போகிறாய்?"

"எங்கள் பள்ளியைப் பார்வையிட அடுத்த ஊரிலிருக்கும் பெரிய மனிதர் மணிவாசகர் இன்று வருகிறார். அதனால் சீக்கிரமாக வரச் சொன்னார்கள். அவர் எங்களை ஏதாவது கேள்விகள் கேட்டாலும் கேட்பாராம். நன்றாகப் படித்துக்கொண்டு வேறு வரச் சொன்னார்கள்."

"நீதான் சமர்த்தனாயிற்றே! உள்ளே சாப்பாடு கட்டி வைத்திருக்கிறேன். எடுத்துக்கொண்டு சாலை ஓரமாகப் போ!"

முத்து சாப்பாட்டு மூட்டையைக் கையில் எடுத்துக்கொண்டு, புத்தகப் பையைத் தோளில் தொங்க விட்டுக்கொண்டு நடந்தான். அக்காள் செந்தாமரை குடிசைக்கு வெளியே நின்றவாறு, தம்பி பள்ளிக்குச் செல்லும் அழகைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

முத்து தந்தை தாயற்றவன்; பன்னிரண்டு வயதுப் பையன்; பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருப்பான்.

செந்தாமரை தன் தாயின் வார்த்தையை மறக்காமல், முத்துவை அன்போடு, கண்ணிலும் மேலாகக் கருதி வளர்த்து வந்தாள். செந்தாமரையின் தாய் இறக்கும்போது, ஒரு சிறு குடிசையையும், அதற்கு எதிரே யிருக்கும் ஒரு புளியமரத்தையும் சொத்தாக வைத்துவிட்டுச் சென்ருள். புளிய மரத்தில் வருடத்திற்கு ஏதோ கொஞ்சம் பணம் கிடைக்கும். அதை வைத்துக்கொண்டு காலம் தள்ள முடியுமா? அதனுல், செந்தாமரை அக்கம்பக்கத்தில் வேலை செய்து, சிறிது பணம் சம்பாதித்தாள். தன் தம்பி சந்தோஷமாக, திருப்தியாக இருக்க வேண்டும் என்ற ஒரே ஆசை தான், செந்தாமரைக்கு!

முத்து நல்லவன் தான். ஆனுல், பணக்கார மாணவர்களைப் பார்த்துப் பார்த்து அவன் ஏங்குவான். அவர்கள் விலையுயர்ந்த உடைகளை அணிந்து கொண்டு மோட்டாரில் வந்து இறங்குவார்கள். முத்துவும் அவர்களைப்போல இருக்க ஆசைப்பட்டான். அதனுல் அக்காள் படும் கஷ்டங்களை அறிந்தும், 'எனக்கு அது வேண்டும், இது வேண்டும்' என்று தொந்தரவு செய்து வந்தான். அக்காளுக்குத் தம்பி கேட்பதையெல்லாம் வாங்கித் தர ஆசைதான். ஆனுல், அவள் நிலைமை அதற்கு இடங் கொடுக்க வில்லையே!

* * *

மணிவாசகர் பாடசாலையின் எல்லா வகுப்புக்களையும் பார்த்துவிட்டுத் தலைமையாசிரியரின் அறையில் உட்கார்ந்து அவருடன் பேசிக் கொண்டிருந்தார்.

"ஏன் ஸார், அந்தப் பையன் பெயர் என்னவென்று சொன்னீர்கள் ?"

"முத்து, அவன்தான் அந்த வகுப்பிலே முதல் மார்க் வாங்குபவன். வகுப்பில் மட்டுமல்ல; இந்தப் பள்ளிக்கூடத்திலேயே அவன்தான் அதிக மார்க் வாங்கும் பையன். ஆனால் பாவம், ஏழை!" என்றார் தலைமையாசிரியர்.

"அப்படியா! பையன் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கிறான். அந்தப் பையனைக் கொஞ்சம் என்னுடன் அனுப்புங்களேன். மாலை காரிலேயே அனுப்பிவிடுகிறேன்." என்றார் மணிவாசகர்.

காரிலே போக சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறதே! முத்து விடுவானா? "ஓ! வருகிறேன்" என்று கூறி, காரில் ஏறினான். கார் மணிவாசகரின் வீட்டை நோக்கிச் சென்றது.

* * *

மணிவாசகர் ஒரு பெரிய பணக்காரர். ஆனால், எவ்வளவு பணமிருந்தும் என்ன பயன்? அவருக்குப் பிள்ளையே கிடையாது! அதற்காக எத்தனையோ கோவில் குளங்களுக்குப் போய் வந்தார்கள், அவரும் அவர் மனைவியும். பாவம்! பலன் ஒன்றுமில்லை. கடைசியாக, ஒரு நல்ல பையனை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்வது என்ற முடிவிற்கு வந்துவிட்டார்கள்.

கார் மாளிகையுள் நுழைந்தது. மணிவாசகர், முத்துவை அழைத்துக்கொண்டு உள்ளே சென்றார். முத்து மாளிகையின் அழகை மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டே சென்றான். 'அடடா! இந்தப் பணக்காரரின் வயிற்றில் நாம் பிறந்திருக்கக் கூடாதா!,

என்று எண்ணி ஏங்கியது, அவனது இளம் உள்ளம்.

மணிவாசகரின் மனைவி மரகதம் முத்துவைப் பார்த்தாள். அவளுக்கு அவனைப் பிடித்துவிட்டது.

மணிவாசகர், "தம்பி, நான் உன்னை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளப் போகிறேன்" என்று முத்துவிடம் கூறினார். முத்துவுக்கு ஒன்றுமே புரியவில்லை. கனவா, நினைவா என்பதே புரியாமல் திகைத்தான்.

"முத்து! உனக்கு ஓர் அக்காள் இருப்பதாகச் சொன்னாயே, அவள் உன்னை அனுப்புவாளா? அவள் தட்டிப் பேச மாட்டாளே!" என்று கேட்டார் மணிவாசகர்.

அக்காவின் அன்பு, அவள் அவனிடம் காட்டும் அக்கறை, அவனுக்காகப் படும்பாடு-இவ்வளவையும் நன்கு அறிந்திருந்தான் முத்து. ஆனால், அவன் ஆசைக்கு அடிமையானவன்; படாடோப வாழ்வில் பாசத்தைப் பறக்கவிட்டவன். எனவே கொஞ்சம்கூட யோசிக்காமல், அவள் அவனுக்காகவே வாழ்வதை மறந்து, "அக்காள் எதுவும் சொல்ல மாட்டாள்" என்று கூறிவிட்டான்.

மணிவாசகர், "சரி, அப்படியென்றால் நீ வீட்டுக்குப்போய் உன் அக்காளிடம் விஷயத்தைச் சொல்லு, நான் நாளைக் காலையில் வந்து அழைத்துக் கொள்கிறேன்" என்றார்.

*   *   *

சூரியன் மறைந்து விட்டான். மெல்ல இருள் வர ஆரம்பித்தது. செந்தாமரை குடிசையின் வெளியே கால்வலிக்க நின்றுகொண்டிருந்தாள். "வழக்கமாகச்

சூரியன் மறையும் முன்பே வந்து விடுவானே, முத்து! இன்று இன்னும் வரவில்லையே!' என்று அக்காள் கவலையோடு காத்துக்கொண்டிருந்தாள். அவள் கண்களில் நீர் நிறைந்திருந்தது.

செந்தாமரைக்கு நின்று நின்று கால்கள் மரத்துப் போய்விட்டன. அவள் மனம் ஒரு நிலையில் இல்லை. தம்பியைத் தேடிக்கொண்டு பள்ளிக்கே போய் விடலாமா என்று நினைத்தாள். அதே சமயம், அவள் வீட்டின் முன் பளபளக்கும் 'பாண்டியாக்' கார் ஒன்று வந்து நின்றது.

முத்து அதிலிருந்து பெரிய பணக்காரப் பையனைப் போல் இறங்கினான். டிரைவரிடம், "நாளைக் காலையில் வரச்சொல். நான் தயாராக இருக்கிறேன்" என்று கூறினான். கார் திரும்பிப் போயிற்று.

"அக்கா! எனக்கு அதிர்ஷ்டம் பிறந்திருக்கிறது. எனக்கு மட்டுமல்ல; உனக்கும் கூடத்தான். வா உள்ளே! செய்தியை விவரமாகக் கூறுகிறேன்" என்றபடி குடிசைக்குள் நுழைந்தான் முத்து. செந்தாமரை அவனைத் தொடர்ந்து உள்ளே சென்றாள்.

முத்து செந்தாமரையிடம் மணிவாசகர் கூறியவற்றைக் கூறினான். "என்னால் உனக்கும் தொல்லை தானே! நான் பணக்காரர் வீட்டில், மகிழ்ச்சியோடிருப்பேன். உனக்குச் சம்மதம்தானே?" என்றும் கேட்டான்.

"முத்து, உன்னை நான் ஒரு தொல்லையாகவா நினைத்தேன்? நீ என் கூடப்பிறந்த தம்பி. உன்னைக் காப்பாற்ற வேண்டியது என் கடமையல்லவா? என்னைவிட்டு விட்டு நீ சீமான் வீட்டுக்குப் போகி

றேன் என்கிருயே. தம்பி! நன்ருக யோசித்துப் பார். கூழானுலும், கஞ்சியானுலும் அன்போடு உன் அக்காள் தருகிருள். இந்த அன்பையும் பாசத்தையும் நீ அந்நியரிடம் எதிர்பார்க்க முடியுமா?'' செந்தாமரை இப்படிப் பேசவில்லை; அவள் மனம் பேசியது.

செந்தாமரையின் பாசத்தைவிட, செல்வந்தர் வீட்டு வாழ்க்கையே மேலானது என்று நினைத்தான் முத்து. மணிவாசகரைப் பற்றிப்பேசினுன்; அவரது மாளிகையைப் பற்றிப் பேசினுன்; அங்குள்ள மதிப்புள்ள பண்டங்களைப் பற்றியும் பேசினுன்; ஆனுல் அக்காளின் அன்பைப்பற்றி ஒரு வார்த்தை-அவளைப் பிரிவதற்காக வருந்துவதாக ஒரு சொல்—சொல்லவே யில்லை.

செந்தாமரையின் உள்ளம் வேதனைப்பட்டது. அவள் கண்களை மூடிக்கொண்டாள். காதைப் பொத்திக் கொண்டாள்.

முத்து முடிவிலே, "அக்கா! நாளை மணிவாசகர் வருவார். என்னை அனுப்ப உனக்குச் சம்மதம் என்று கூறு. கூறுவாயா அக்கா?'' என்று கேட்டான்.

செந்தாமரைக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. யோசித்தாள். கடைசியில், "சரி, தம்பி இஷ்டம் போலவே போகட்டும்'' என்று முடிவு செய்தாள். உடனே, "ஆகட்டுமடா! தம்பி. அப்படியே செய்கிறேன்'' என்று அன்போடு கூறினுள். அவள் குரலில் வருத்தமும் கலந்திருந்தது!


* * *

மறு நாள் மணிவாசகருடன் காரில் ஏறிக் கொண்ட முத்து, " போய் வருகிறேன், அக்கா ''

என்று கூறினன். செந்தாமரை கலங்கிய கண்களுடன் விடை கொடுத்தாள்.

முத்து உல்லாசமாக நாட்களைக கழித்தான். முப்பது நாட்கள் சென்றன. ஒருநாள்கூட அருமை அக்காளைப் போய்ப்பார்க்கவில்லை. அவளிருக்கிருளா, இறந்து விட்டாளா என்பதைப் பற்றிக்கூட அவன் கவலைப்படவில்லை.

முத்துவை மணிவாசகர் சட்டப்படி இன்னும் ஸ்வீகாரம் செய்து கொள்ளவில்லை. ஒரு மாதத்தில் முத்துவின் நடத்தை திருப்தி அளித்தது. அடுத்த வாரத்தில் சட்டப்படி ஸ்வீகாரம் செய்து கொள்ள எண்ணினர். அதற்குள் ஓர் எதிர்பாராத நிகழ்ச்சி நடந்தது.



ஒரு நாள் மாடிப்படிகளில் குதித்துக் குதித்து ஏறிக்கொண்டிருந்தான் முத்து. அப்போது அவனுடைய கால் இடறிவிட்டது. தடுமாறிக் கீழே 'மடார்' என்று விழுந்தான். உடனே மணிவாசகரும் அவர் மனைவியும் ஓடி வந்தனர். நடந்ததை அறிந்தனர். உடனே, முத்துவைத் தூக்கினர். அவன் வலது காலிலே நல்ல அடிபட்டிருந்தது. வைத்தியர் வந்தார்; சிகிச்சை செய்தார். இரண்டு வாரத்திற்குப் பிறகு குணமானது. ஆனால், முத்து பழைய முத்துவாக இல்லை. அவனது வலது கால் ஊனமாகிவிட்டது! இனி நொண்டி நொண்டித்தான் நடக்க முடியும்! வேகமாக நடக்க முடியாது!

நொண்டியாகிவிட்ட அவனை ஸ்வீகாரமெடுத்துக் கொள்ள மணிவாசகரின் மனைவி விரும்பவில்லை. மணிவாசகருக்கும் ஒரு நொண்டியைப் பிள்ளையாக வைத்துக் கொள்ள மனமில்லை.

நொண்டியானபின், அந்த வீட்டில் எல்லோரும் அவனை அலட்சியம் செய்தனர். ஒரு நாள் மணிவாசகரின் தம்பியிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. இவ்வளவு நாளும் சம்மதிக்காமலிருந்த அவர், இப்போது தம்முடைய புதல்வர்களில் ஒருவனை ஸ்வீகாரம் செய்து தருவதாக எழுதி யிருந்தார். அதைப் படித்ததும் மணிவாசகர் முத்துவை அழைத்து அவனிடம் நூறு ரூபாய் கொடுத்தார்.

"முத்து, நீ உன் அக்காளிடமே போய்விடு. அவள்தான் உன்னை நன்கு பாதுகாப்பாள்" என்று சுருக்கமாகக் கூறிவிட்டு, டிரைவரிடம், "டிரைவர், முத்துவை அழைத்துக்கொண்டு போய் அவன்

வீட்டில் சேர்த்துவிடு'' என்று உத்தரவு போட்டார். முத்துவுக்கு விஷயம் புரிந்துவிட்டது. உடனே அவன் தலை சுற்றியது. ஆயினும், என்ன செய்வது? பேசாமல் காரிலே ஏறிக் கொண்டான். கார் கிளம்பியது. வீட்டிற்குச் சிறிது தூரத்திலேயே முத்து காரை நிறுத்தச் சொன்னான். கார் நின்றது. முத்து அங்கேயே இறங்கிக் கொண்டு காரை அனுப்பி விட்டான்.

காரிலிருந்து இறங்கிய முத்து நொண்டி, நொண்டித் தன் வீட்டை நோக்கி நடந்தான். மணிவாசகரின் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்ததிலிருந்து அன்றுவரை நடந்த சம்பவங்களை அவன் நினைத்துப் பார்த்தான். ''கால் ஊனமானதும் என்னை விரட்டி விட்டார் மணிவாசகர். அக்காள் முகத்தில் நான் எப்படி விழிப்பேன்! அன்பை அலட்சியப்படுத்தி விட்டு ஆடம்பரத்தில் பிரியப்பட்டுச் சென்றேன் நான். எனக்கு இதுவும் வேண்டும்; இன்னமும் வேண்டும்'' என்று கூறிக்கொண்டான் முத்து.

அப்போது நல்ல வெய்யில்! அவனால் தொடர்ந்து நடக்க முடியவில்லை. என்றாலும் தத்தித் தத்தி வீட்டிற்கு வந்தான்.

தூங்கிக்கொண்டிருந்த செந்தாமரை வேலைக்குச் செல்வதற்காக எழுந்து அப்போதுதான் வெளியே வந்தாள். 'அக்கா!' என்ற தழுதழுத்த குரலைக் கேட்டுத் திகைத்தாள்; திரும்பிப் பார்த்தாள்.

அவள் கண்ணையே நம்ப முடியவில்லை! கண்ணீர் வடிய நின்ற முத்துவைக் கண்டதும், அவள் அவனருகே ஓடினாள். அன்போடு கட்டி அணைத்துக்

கொண்டாள் அவள். கால் நொண்டியாய் இருப்பதைப் பார்த்துப் பார்த்துக் கண்ணீர் விட்டாள். "தம்பி, உன் கால் எப்படியடா நொண்டியானது?" என்று கேட்டாள். முத்து அழுதுகொண்டே நடந்ததைச் சொன்னான்.

பிறகு, "அக்கா, இதோ அவர் தந்த நூறு ரூபாய்! நான் இப்போது நொண்டி! என்னை ஏற்று ஆதரிப்பாயா?" என்று கேட்டான்.

செந்தாமரை, "முத்து, நொண்டியானாலும் குருடானாலும், நீ என் தம்பி. தங்கத் தம்பி! என் உயிர்த் தம்பி! உன்னை நான் கைவிடுவேனா? அந்த நூறு ரூபாய் யாருக்கு வேண்டும்? நாளை அதை மணிவாசகர் முகத்தில் வீசி எறிந்து விட்டு வருகிறேன்" என்றாள்.

அக்காவின் அன்பு மொழிகள் வெய்யிலில் வந்த அவனது மனக் கவலையையும் களைப்பையும் போக்கின. அன்பாகிற நிழலின் அருமையை அப்போதுதான் முத்துவால் உணர முடிந்தது.

# ஊர்மிளா

சூரியன் மறையும் நேரம்!

அந்தக் கிராமத்துச்சிறுமிகள், கோயிலின் அருகே யுள்ள திறந்த வெளியில் விளையாடிக்கொண்டிருந் தனர். சிறிது தூரத்திலிருந்து ஒரு மரத்தடியில் நின்றபடி ஊர்மிளா அவர்களைப் பார்த்துக்கொண் டிருந்தாள்.

சிறுமிகள் விளையாடி முடிந்ததும், அந்த மரத் தடிக்கு வந்து பேச ஆரம்பித்தனர். அக்கிராமத்திற்குப் பெரியநாயகி என்னும் சிறுமி புதிதாக வந்திருந்தாள்.

அந்தக் கிராமத்துச் சிறுமிகளுக்கு ஏழை, பணக் காரர் என்னும் வித்தியாசமே இல்லை. எல்லோரும் ஒன்றுகூடி விளையாடுவார்கள். பணக்கார வீட்டுச் சிறுமி கள் கொண்டுவரும் தின்பண்டங்களை ஏழைச் சிறுமி களுக்கும் பங்கிட்டுத் தருவார்கள். மொத்தத்தில் குடிசையில் வாழும் குழந்தைகளும், மாடியில் உலா வும் குழந்தைகளும் ஒன்ருக, ஒற்றுமையாக வாழ்ந் தார்கள்.

பெரியநாயகி அன்றுதான் கிராமத்திலிருந்த தன் அத்தை வீட்டுக்கு வந்திருந்தாள். அதனுல் அவ ளுக்கு மற்ற சிறுமிகளை ஒருத்தி அறிமுகப் படுத்தி வைத்தாள். ‘இவள் இன்மொழி! சின்ன பண்ணைக் காரர் மகள். இவள் செங்கமலம், சேரியிலிருப் பவள்’—இப்படி அங்கிருந்தவர்களை யெல்லாம் அறி முகப்படுத்திஞள்.

பெரியநாயகிமுகத்தைச் சுளித்தாள். "ஐயையே! சேரிப் பெண்களோடா நீங்கள் சேர்ந்து விளையாடுகிறீர்கள்! அவர்களைத் தொடுவதுகூடப் பாவம்" என்று கூறிக்கொண்டே முகத்தைச் சுளித்தாள்.

அந்தக் கிராமத்துச் சிறுமிகள் இதைப் போன்ற சொற்களைக் கேட்பது இதுதான் முதல் தடவை. அவர்களில் யாருக்குமே என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. ஆனால், ஊர்மிளா மட்டும் அவர்களுக்குச் 'சுடச்சுட' பதில் சொல்ல வேண்டும் என்று விரும்பினாள். ஆனால், சொல்லவில்லை.

ஊர்மிளா மிக அழகான பெண். நல்ல ஆடைகளை அணிந்திருந்தாள். பெரிய பண்ணைக்காரரின் ஒரே செல்ல மகள். இவற்றை அறிந்ததும் பெரியநாயகி அவளைச் சிநேகம் செய்துகொள்ளவிரும்பினாள்.

"ஊர்மிளா, நீ எந்த வகுப்பில் படிக்கிறாய்?" என்று கேட்டாள். ஊர்மிளா பதில் சொல்லவில்லை,

"நீயுமா இந்தச் சேரிப் பெண்களோடு விளையாடுகிறாய்?" என்று மீண்டும் கேட்டாள். பதிலில்லை!

"என்ன ஊர்மிளா! நான் கேட்கிறேன். நீ பேசாமலிருக்கிறாயே!" என்று கேட்டாள்பெரியநாயகி.

அப்போதும் ஊர்மிளா மௌனமாக இருந்தாள். 'பண்ணைக்காரரின் பெண் என்னும் கர்வத்தில் ஊர்மிளா பேசவில்லை' என்று நினைத்தாள், பெரியநாயகி. உடனே அவளுக்குக் கோபம் வந்தது.

"ஏனடியம்மா! ஊமை மாதிரி வாயை மூடிக்கொண்டு நிற்கிறாய்? பேசினால் என்ன? வாயிலுள்ள முத்துக் கொட்டிவிடுமா?" என்று கேட்டாள்.

உடனே அவள் அருகில் இருந்த ஒருத்தி, பெரிய நாயகியின் காதில் ஏதோ சொன்னாள். உடனே பெரிய நாயகி அலட்சியமாக ஊர்மிளாவைப் பார்த்தாள்.

"ஓ! நீ ஊமையா! ஊமை ஊரைக் கெடுக்கும், பெருச்சாளி வீட்டைக் கெடுக்கும். என்ன ஊமை! அப்படி முறைத்துப் பார்க்கிறாயே!" என்றாள் பெரிய நாயகி.

இதுவரை பேசாமல் நின்ற ஊர்மிளாவின் கண்களில் நீர் பெருகியது. 'மளமள' வென்று கண்ணீர் சிந்தினாள்.

பெரியநாயகி, "அடியம்மா, நீலிக்கு நினைத்தாலே கண்ணீர் என்பார்கள். அது உன் விஷயத்தில் உண்மைதான்" என்றாள்.

ஊர்மிளா அங்கிருந்து ஓடினாள். கண்களிலிருந்து பெருக்கெடுத்தோடும் கண்ணீரைத் துடைக்காமல் ஓடினாள். அவள் காதில் யாரோ ஓயாமல் 'ஊமை ஊரைக் கெடுக்கும்' என்று கத்துவது போலிருந்தது!

மரத்தடியி லிருந்த சிறுமிகள் பெரியநாயகி பேசியதை நினைத்து வருந்தினர். ஆனால், பெரியநாயகி 'ஊமைப் பெண் பொல்லாதவள்' என்று ஆரம்பித்து ஊமையைப் பற்றி இல்லாத கதைகளையெல்லாம் சொன்னாள். அவற்றைக் கேட்க விரும்பாமல் சேரிச் சிறுமிகள் எழுந்து போய்விட்டனர்.

* * *

ஊர்மிளா, அழகி, அன்புடையவள், மிகப் பெரிய பண்ணைக்காரரின் பெண். ஆனால்....அவள் ஊமை! உலகில் எத்தனையோ பேர் வீண் பேச்சுப் பேசிக்

காலம் கழிக்கிறுர்கள். அவர்களைப் போல் ஊர்மிளா செய்ய முடியாது! 'சும்மா இருப்பதே சுகம்' என்ற தத்துவத்தின் இலக்கணமாக அவள் பேச முடியாமல் சும்மா இருந்தாள்.

அவள் வாயைத் திறப்பாள். உதடுகள் அசையும். ஒலியும் எழுப்பும். ஆனுல், அது பொருள் உள்ளதாக இருக்காது. ஏதோ ஒரு சப்தமாக இருக்கும். ஊர்மிளா ஊமை! ஆதிகாலத்தில் மொழி தோன்றுவதற்கு முன் மக்கள் இப்படித்தானே, ஊமைகளாய் இருந்தனர். ஆனுல், இன்றும் அதைப் போல பேச முடியாத ஊமைகள் ஏனே தோன்றுகின்றனர். பிறர் ஏளனத்திற்கு ஆளாகின்றனர்.

ஊர்மிளாவைத் திட்டுங்கள், அழமாட்டாள். அவளை உதையுங்கள்; ஒரு துளி கண்ணீர்கூடச் சிந்தமாட்டாள். அவளிடமிருப்பவற்றைப் பறித்துக் கொண்டு பறந்து செல்லுங்கள்; பதைபதைக்க மாட்டாள். ஆனுல்...ஆனுல்...அவளை 'ஊமை' என்று மட்டும் சொல்லிவிடாதீர்கள். சொன்னுல், பதை பதைப்பாள் ; அழுவாள் ; கண்ணீர் சிந்துவாள்.

பிறக்கும்போதே ஊமையாகப் பிறந்துவிட்டாள். இதற்கு அவள் என்ன செய்வாள்? இதை உணராமல் சிலர் அவளைக் கேலி செய்தார்கள். சிலர் ஊமை என்று கூறி அவள் உள்ளக் கண்ணுடியை உடைத்துத் தூள்தூளாக்கி வந்தனர். அந்தச் சிலருக்குத் தலைமை வகிக்க வந்தாள் பெரியநாயகி!

* * *

அந்தக் கிராமத்தில் ஏழை பணக்காரர் என்ற வித்தியாசம் இல்லாமல் சிறுமிகள் சேர்ந்து பழகி

வந்தனர். இது கொஞ்ச காலத்துக்கு முன்னல். ஆனல் இப்போது...? பெரியநாயகி வந்த பிறகு பணக்காரப் பெண்கள் ஏழைச் சிறுமிகளுடன் சேருவதில்லை; அவர்களுக்கு எதுவும் கொடுப்பதுமில்லை.

ஒன்றுபட்ட ஊர் இரண்டானது. மாலையில் ஏழைச் சிறுமிகள் தனியே விளையாடினர். பணக்காரப் பெண்கள் தனியே விளையாடினர். ஊர்மிளா பணக்காரப் பெண்தான். ஆனல், அவள் மட்டும் ஏழைகளுடன் சேர்ந்து விளையாடினள். தினமும் முறுக்கோ, சீடையோ கொண்டு வருவாள். எல்லா ஏழைச் சிறுமிகளுக்கும் தருவாள்.

பணக்காரச் சிறுமிகளும் தினமும் ஏதாவது கொண்டு வருவார்கள். ஆனல், பெரியநாயகியைத் தவிர!

பெரியநாயகி பிறர் கொண்டுவருவதைத் தின்று கொழுத்து வந்தாள். அத்துடன், ஊர்மிளாவை ஊமையென்று கிண்டல் செய்யும்படி மற்றவர்களையும் தூண்டிவிட்டாள். ஏழைப் பெண்களிடம் எரிந்து விழக் கற்றுக் கொடுத்தாள்.

இதனல் தினமும் ஊர்மிளா கண்ணீர் விட்டாள். நடப்பதை வீட்டிலும் சொல்வதில்லை. சொல்லவும் முடியாது. சைகை மூலம் பேசவே அவள் வெட்கப் பட்டாள். வீதியில், விளையாடுமிடத்தில், ஆற்றங் கரையில், அரசமரத்தடியில், எங்கும், 'ஊமை ஊரைக் கெடுக்கும், பெருச்சாளி வீட்டைக் கெடுக்கும்' என்ற பழமொழி கேட்கத் தொடங்கியது. ஊர்மிளா குமுறினள்; கண்ணீர் விட்டாள். அதைத் தவிர வேறென்றும் செய்யவில்லை.

ஒரு நாள் மாலை.

கோயிலின் அருகில் இருந்த விளையாட்டு மைதானத்தில், ஒரு புறத்தில் ஏழைப் பெண்களும், மறு புறத்தில் பணக்காரப் பெண்களும் விளையாடிக்கொண்டிருந்தனர்.

பணக்காரப் பெண்கள் கூட்டத்திலிருந்த இன்மொழி திடீரென்று, "ஐயோ, என் மோதிரத்தைக் காணவில்லையே!" என்று கத்தினாள். உடனே விளையாட்டு நின்றது. எல்லோரும் மோதிரம் கீழே விழுந்து கிடக்கிறதா என்று தேடினர். எங்கும் கிடைக்கவில்லை.

"புது மோதிரம். நேற்றுத்தான் என் அப்பா பட்டணத்திலிருந்து வாங்கிக்கொண்டு வந்தார். காணவில்லை என்றால் அடிப்பாரே!" என்று அழுதாள், இன்மொழி.

பெரியநாயகி, இன்மொழியிடம், "நான் இங்கு வரும்போது அந்தச் சேரிக்கழுதை செங்கமலம், இங்கு குனிந்து எதையோ எடுத்துக் கொண்டு போனதைப் பார்த்தேன்" என்றாள்.

உடனே ஒருத்தி போய், செங்கமலத்தை அழைத்து வந்தாள். செங்கமலத்துடன் ஏழைச் சிறுமிகளின் கூட்டமும் சேர்ந்து வந்தது. பெரியநாயகி செங்கமலத்தின் மீது திருட்டுக் குற்றம் சாட்டி விசாரணை நடத்தினாள்.

"செங்கமலம், அந்த மோதிரம் எங்கே?"

"எந்த மோதிரம்?"

"அதுதான் இன்மொழியின் மோதிரம். இங்கிருந்து எடுத்துச் சென்றாயே!"

"நானு ? இல்லவே இல்லை! நான் மோதிரத்தைப் பார்க்கவேயில்லை"

"அப்படிச் சொல்லு! அப்போதுதானே உன்னை விட்டுவிடுவார்கள்! கழுதை! நீ வரும்போது இங்கே குனிந்தாயா?"

"ஆமாம், குனிந்தேன்."

"குனிந்து எதை எடுத்தாய்? மோதிரத்தைத் தானே!"

"இல்லை! இல்லை! இங்கே ஒரு வேர்க்கடலை கிடந்தது. அதைத்தான் நான் எடுத்தேன். மோதி ரத்தை நான் பார்க்கவே இல்லை."

செங்கமலம் அழுதபடியே கூறினுள். பெரிய நாயகி சிரித்தபடியே, "இன்மொழி, மோதிரத்தைத் திருடிக்கொண்டு வேர்க்கடலை என்கிருள். இவளை உதைத்தால்தான் உண்மையைக் கூறுவாள்" என்ருள்.

"ஆமாம், உதைக்கவேண்டும்" என்றனர் சில பணக்காரச் சிறுமிகள்.

"மரியாதையாகச் சொல்லு. எங்கே மோதிரம்?" என்று கேட்டுக்கொண்டே செங்கமலத்தின் கன்னத் தில் ஓர் அறை விட்டாள்.

செங்கமலம், 'ஐயோ!' என்று அலறினுள். இதுவரை ஏழைப் பெண்களின் கூட்டத்தில் நின்று நடந்ததைக் கவனித்துக் கொண்டிருந்த ஊர்மிளா விற்கு மேலும் பொறுத்துக் கொண்டிருக்க முடிய வில்லை. செங்கமலம் மிகவும் நல்லவள் என்பதும், அவள் மோதிரத்தை எடுத்திருக்க மாட்டாள் என் பதும் ஊர்மிளாவுக்குத் தெரியும்.



அதனல் அவள் மேலும் அடிக்கச் சென்ற பெரிய நாயகியின் அருகிலே ஓடினுள். அவளைத் தடுத்து நிறுத்த முயன்ருள். உடனே பெரியநாயகியின் கோபம் ஊர்மிளா மீது திரும்பியது. அந்தக் கோபத்தில், "ஓ! இந்தத் திருட்டில் உனக்குக்கூடச் சம்பந்தம் உண்டா? அதுதானே திருடிக்குப் பரிந்து கொண்டு வருகிருய்! ஏய் ஊமை, மோதிரம் எங்கே? உன்னிடம் கொடுத்திருக்கிருளா?" என்று ஏளனமாகக் கேட்டாள்.

அவ்வளவுதான்! ஊர்மிளாவின் கோபம் எல்லையைக் கடந்து விட்டது.

உடனே பெரியநாயகியின் மீது பாய்ந்தாள். நாலு அறை கொடுத்து அவளைப் பிடித்துத் தள்ளி

ளுள். பெரியநாயகி தொப்பென்று சிறிது தூரத்தில் போய் விழுந்தாள். அப்போது அவள் பாவாடையில் ஒளித்து வைத்திருந்த ஏதோ ஒன்று கீழே விழுந்தது. அனைவரும் அதைப் பார்த்தனர்.

அது என்ன? வேறு எதுவுமில்லை; இன்மொழி யின் தங்க மோதிரமேதான்!

குட்டு வெளிப்பட்டதும் பெரியநாயகிக்கு அவ் விடத்தில் இருக்கவே பயமாயிருந்தது. உடனே அங்கிருந்து தலை தெறிக்க ஓடினுள்.

ஊர்மிளா பணக்காரச் சிறுமிகளைப் பார்த்தாள். "செங்கமலத்தின் மீது குற்றம் சாட்டினீர்களே; பார்த்தீர்களா நடந்ததை! இனியாவது இப்படிப் பட்ட ஏழைப் பெண்களுக்குத் 'திருட்டுப் பட்டம்' கட்டாதீர்கள்' என்று ஊர்மிளா கூறவில்லை. ஆனுல், அவளதுபார்வை கூறியது; கண்கள் பேசின.

அதுவே அவர்களுக்குப் போதுமானதாக இருந் தது. இன்மொழி செங்கமலத்திடம் மனமார மன்னிப் புக் கேட்டாள். மற்றவர்கள் ஊர்மிளாவை ஊமை என்றதற்காக வருந்தினர்; மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர். இரண்டு பட்ட ஊர் மீண்டும் ஒன்ரு னது. ஊர்மிளாவை ஊமை ஊர்மிளா என்று எவருமே கூப்பிடுவதில்லை. திரும்பவும் எல்லோரும் சேர்ந்து விளையாடினர். ஆனுல், பெரியநாயகி அன்றே கிரா மத்தைவிட்டு, தன் ஊருக்குப் போய்ச் சேர்ந்தாள்.

பெருச்சாளி பெரியநாயகி வீட்டைக் கெடுக்க வில்லை; ஊரையே கெடுத்தாள்! ஆனுல், ஊர்மிளா ஊரைக் கெடுக்கவில்லை; இரண்டுபட்ட ஊரை ஒன்ருக்கினுள்!

# புலி வேட்டை

"கண்ணே ராமு, வெளியே எங்கும் போகாதே! வீட்டுத் தோட்டத்திலேயே விளையாடு. காட்டிலே புலி இருக்குதாம். அது கிராமத்துக்குள் வந்தாலும் வரும்; பத்திரம்!"

"சரியம்மா!"

* * *

"விளக்கு வைத்த பிறகு வீதியிலே என்ன வேலை?"

"சும்மா என் சிநேகிதனோடு பேசிக்கொண்டிருக்கிறேன்."

"சரி, சரி. உள்ளே வா. ஊரெல்லாம் புலியைப் பற்றி ஒரே பேச்சாயிருக்கு. உனக்குத் தெரியாது?"

* * *

"டேய், கடையை மூடுடா!"

"என்ன எஜமான், இவ்வளவு சீக்கிரம்?"

"நமது ஊர்க் காட்டிலே புலி இருக்குதாம். இருட்டுவதற்குள் வீட்டிற்குப் போய்விட்டால் நல்லது தானே!"

* * *

அந்தக் கிராமத்தின் எந்த மூலை முடுக்கிலும் புலியைப்பற்றியே பேச்சாக இருந்தது. கிராமத்தின் கோடியில் ஒரு சிறு காடு இருந்தது. அந்தக் காட்டில் கொடிய மிருகங்கள் இல்லை என்றே இதுவரை மக்கள் நினைத்திருந்தார்கள். ஆனால், ஒரு புலி புதிதாக

அந்தக் காட்டுக்குக் குடி வந்திருக்கிறது என்ற செய்தி கேட்டு ஊரே நடுங்கியது.

புலியை நேரில் கண்டதாகப் பலர் கூறினார்கள் இரவில் கிராமத்திற்குள் வந்ததைக் கண்டதாகச் சிலர் கூறினர். புலியின் உறுமலைக் காதாலே கேட்டதாகப் பலர் சொன்னார்கள். அதன் காலடிகளைக் கண்டதாகச் சிலர் சொன்னார்கள்.

கிராமம் முழுவதும் புலியைப் பற்றியே பேச்சு. விளக்கு வைக்கும் நேரத்திற்கு முன்பே மக்கள் நடமாட்டம் மறைந்தது; கடைகள் மூடப்பட்டன. காடு இருக்கும் திசைப்பக்கம் எவருமே, பகலில்கூட எட்டிப் பார்ப்பதில்லை.

புலிப் பயம் மிகப் பெரியதாகிவிட்டது. அந்தப் புலியைச் சுட்டுக் கொன்றாலொழிய அந்தக் கிராம மக்களுக்கு நிம்மதி யில்லை. அதனால், கிராம அதிகாரி புலியைச் சுட்டுக் கொல்ல ஆட்களை அனுப்பும்படி கலெக்டருக்கு எழுதினார்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு பதில் கிடைத்தது. புலியை வேட்டையாட ஐந்து பேரை அக்கிராமத்திற்கு அனுப்பி வைப்பதாக அதில் கூறப்பட்டிருந்தது. இதை அறிந்ததும் கிராம மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். வேட்டைக்காரரை ஆவலுடன் எதிர்பார்த்தனர்.

வேட்டைக்காரருக்கு வீரப்பன்தான் தலைவன். அவர்கள் கிராமத்திற்கு வந்ததும் மக்கள் அவர்களை வரவேற்றனர்; உபசரித்தனர்; எப்படியாவது புலியைக் கொன்றுவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

வீரப்பன், "நீங்கள் பயப்பட வேண்டாம். மூன்றே நாட்களில் அந்தப் புலியைச் சுட்டு வீழ்த்தி விடுகிறேன். இதென்ன பிரமாதம்! நான் பதினறு அடி வேங்கையைக்கூடச் சுட்டுச் சுருண்டுவிழ வைத்திருக்கிறேன். உதாரணத்திற்கு ஒன்று கூறுகிறேன், பாருங்கள். ஒரு சமயம் பெரிய மலேயில் இருக்கும் கரியகாட்டிலே..." என்று ஆரம்பித்து ஏதேதோ கதை அளந்தான். தன் வீரப் பிரதாபங்களேத் தானே விளம்பரப் படுத்திக்கொண்டான்.

ஒன்றும் தெரியாத அப்பாவி மக்கள் வாயைப் பிளந்தபடி வீரப்பன் சொன்னதையெல்லாம் கேட்டுக் கொண்டு நின்றனர்.

ஒரு வழியாக வீரப்பனின் சுய விளம்பரம் முடிந்தது. கிராமத்தினர் அவரவர் வீட்டிற்குச் சென்றனர். வீரப்பன் தன்னுடன் உதவிக்கு வந்த நால்வரையும் அழைத்துக்கொண்டு காட்டிற்குச் சென்ருன்.

காடு மிகச் சிறியது. அதில் ஒரே ஒரு குளம் இருந்தது. புலி நீரைக் குடிக்க அங்குதான் வர வேண்டும் என்று தீர்மானித்தான், வீரப்பன். அன்றிரவே புலியை வேட்டையாடிவிடலாம் என்று எண்ணினன். உடனே, புலியைச் சுட்டதற்காக, அரசாங்கத்தார் அளிக்கப்போகும் பாராட்டு, பதக்கம், ஆகியவற்றைப் பற்றி எண்ணத் தொடங்கி விட்டான்.

"சார்! இந்த மரத்தில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யட்டுமா?" என்ருன் நால்வரில் ஒருவன்.

அப்போதுதான் வீரப்பன் கற்பனேயிலிருந்து விடுபட்டான். "உம்........செய்யுங்கள்" என்று உத்தரவிட்டான்.

அன்றிரவு வீரப்பனின் ஆட்கள் மரங்களில் ஏறி உட்கார்ந்து கொண்டனர். புலியின் வரவை எதிர்பார்த்து விழித்துக்கொண்டிருந்தனர்.

மணி பன்னிரண்டாயிற்று. ஆனல், புலி வரவில்லே. ஒரு வேளே விடியும் சமயத்தில் வந்தாலும் வரலாம் என்று காத்துக்கொண்டிருந்தனர் வீரப்பனும் அவனது ஆட்களும்.

விடியும் நேரம் வந்தது. விடிந்தும் விட்டது. ஆனல், எதிர்பார்த்த புலி மட்டும் வரவில்லே. வீரப்பனுக்கு அலுப்புத் தட்டியது. தன் தோழர்களேப் பார்த்தான். அவர்கள் நிம்மதியாக மரக்கிளேகளில் தூங்கிக் கொண்டிருந்தனர்.

"இந்தத் தூங்கு மூஞ்சிகளே வைத்துக்கொண்டு எப்படி வேட்டையாடுவது?" என்று முணுமுணுத்துக் கொண்டே வீரப்பன் மெல்ல மரத்தை விட்டிறங்கினன். சோம்பல் முறித்துக் கொண்டான். அருகிலிருந்த குளத்தில் இறங்கினன். நீரை அள்ளி அள்ளி முகத்தை அலம்பத் தொடங்கினன்.

அப்போது......

ஏதோ ஓசை கேட்டது. வீரப்பன் திடுக்கிட்டுத் திரும்பினன். ஏதோ ஒன்று நடந்து வரும் சத்தம் நன்ருகக் கேட்டது. அப்போதுதான் வீரப்பன், தன் துப்பாக்கி பரண்மீது இருக்கிறது என்பதை உணர்ந்தான்.

"ஐயையோ! வருவது நிச்சயம் புலியாகத்தான் இருக்கவேண்டும். ஆனல், துப்பாக்கி கையில் இல்லேயே!" என்று நடுங்கினன். அவன் தோழர்களோ நன்ருகத் தூங்கிக்கொண்டிருந்தனர்.

காலடிச் சத்தம் நெருங்கியது. வீரப்பன் மடமட வென்று ஓடினன். மரத்தின்மீது ஏறினன். பாதி மரம் ஏறிக்கொண்டிருக்கும் போதே, சத்தம் வந்த திசையிலிருந்து ஒரு மிருகம் வந்தது.

அது என்ன மிருகம் ?

வீரப்பன் அதைப் பார்த்தான். அவனுக்குச் சிரிப்பு வந்தது ! வந்தது புலியல்ல ; அது ஒரு நரி ! தன்னைப் பயமுறுத்திய அந்த நரியையாவது சுட்டுத் தள்ளவேண்டும் என்று பரணை அடைந்தான் ; துப் பாக்கியை எடுத்தான் ; சுட்டான். ஆனல், நரி தப்பித்துக்கொண்டது.

துப்பாக்கிச் சத்தத்தைக் கேட்டதும் தூங்கிக் கொண்டிருந்தவர்கள், வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தனர். 'வீரப்பன் புலியைச் சுட்டுவிட்டான்' என்று நினைத்தனர். அதே சமயம் காட்டை நோக்கி வந்துகொண்டிருந்த சிலரின் காதுகளில் துப்பாக்கிச் சத்தம் விழுந்தது. புலியைச் சுட்டார்களா, இல் லையா என்று பார்க்கவே அவர்கள் அங்கு வந்தார்கள். துப்பாக்கிச் சத்தத்தைக் கேட்டதும், "ஆ! வீரர்கள் புலியைச் சுட்டுவிட்டார்கள் !" என்று முடிவு செய்து விட்டார்கள். உடனே திரும்பிச் சென்று, கிராமத்தில் செய்தியைக் கூறினர்.

* * *

"எங்கே புலி ? சுட்டு விட்டீர்களா ? குறி தவற வில்லையே !" என்று வீரப்பனைப் பார்த்து அவனு டைய ஆட்கள் கேட்டனர். வீரப்பன் வெட்கத்துடன் நடந்ததை மெதுவாகக் கூறிக்கொண்டிருந்தான். அதேநேரத்தில், "வேட்டைவீரன் வீரப்பனுக்கு ஜே!",

என்று கூச்சலிட்டுக்கொண்டு கிராம மக்கள் காட்டை நோக்கி வந்துகொண்டிருந்தனர்.

வீரப்பனுக்கு ஒன்றுமே தெரியவில்லை! வந்த மக்கள் வீரப்பனுக்கு மாலையிட்டனர்; பாராட்டினர். இத்தனைக்கும் வீரப்பன் ஒன்றுமே பேசவில்லை. கிராம அதிகாரி வீரப்பனைப் பார்த்து, "எங்கே சுட்ட புலி?" என்று கேட்டார்.

வீரப்பன் தலை குனிந்தான். அவனுடைய ஆட்கள் விஷயத்தை மெதுவாகக் கூறி முடித்தனர். மகிழ்ச்சியுடன் வந்த மக்கள் மிகுந்த ஏமாற்றத்துடன் திரும்பினர்.

* * *

வீரப்பனுக்கு அவமானம் தாங்க முடியவில்லை. எப்படியாவது அந்தப் புலியைக் கொன்றுவிட்டுத் தான் அந்தக் கிராமத்தைக் விட்டுக் கிளம்ப வேண்டும் என்று முடிவு செய்தான்.

ஒரு வாரம் ஓடி மறைந்தது!

வீரப்பனின் வேட்டை முடியவில்லை. கொல்ல நினைத்த புலியைக் கண்ணால்கூடப் பார்க்க முடியவில்லை. குளத்திற்குத் தண்ணீர் குடிக்கக்கூட வராமல் அது எங்கே செல்கிறது என்பதும் புரியவில்லை.

ஒரு நாள் பகல் நேரம்.

வீரப்பனும், அவன் ஆட்களும் சாப்பிட்டபிறகு, அன்று இரவு எந்த இடத்தில் பரண் அமைக்கலாம் என்று யோசித்துக்கொண்டிருந்தனர்.

பிறகு ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்தனர். அங்கே புதர்கள் அடர்ந்திருந்தன. அங்கிருந்த ஒரு மரத்தில் பரண் அமைக்க முடிவு செய்தனர்.

EXTENSION

திடீரென்று வீரப்பனது ஆட்களில் ஒருவன், "சார், கொஞ்சம் பேசாமல் இருங்கள். ஏதோ சத்தம் கேட்கிறது" என்ருன்.

உடனே அனைவரும் உற்றுக் கேட்டனர். 'சல சல' வென்று சத்தம் கேட்டது. "சார், புலியின் காலடி ஓசை இப்படித்தானே கேட்கும்?" என்ருன் ஒருவன். வீரப்பன் தன் கையிலிருந்த துப்பாக்கியை இறுகப் பிடித்தான். மற்றவர்கள் கையிலும் துப்பாக்கிகள் இருந்தன.



கேட்ட சத்தம் நெருங்கி வரவில்லை. ஆனல், தொடர்ந்து கேட்டுக்கொண்டேயிருந்தது. புதருக்கு

மறுபுறம் இருப்பதை அவர்களால் பார்க்கவும் முடியவில்லை. அதனால், ஐவரும் பிரிந்து புதரைச் சுற்றிக் கொண்டு செல்ல முடிவு செய்தனர்.

ஐந்து பேரும் அடிமேல் அடி வைத்து, மெல்ல நடந்தனர். புதரைச் சுற்றிக்கொண்டு மறுபுறம் சென்றனர்.

அங்கே ஓர் உருவம் இருந்தது. ஆனால், புலியல்ல; கிராமத்துச் சிறுவன் சின்னய்யன் சுள்ளிகளைப் பொறுக்கிக்கொண்டிருந்தான்.

அவனைக் கண்டதும் வீரப்பனுக்கும் மற்றவர்களுக்கும் ஏமாற்றமாயிருந்தது. அவர்களுக்கும் சிறுவன்மேல் கோபம் வந்துவிட்டது. "டேய்!" என்று அதட்டிய குரலில் அழைத்தான் வீரப்பன்.

சுள்ளி பொறுக்குவதில் முனைந்திருந்த சின்னய்யன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். அவன்முன் வேட்டை வீரர்கள் துப்பாக்கியை முன்னால் நீட்டியவாறு நின்றுகொண்டிருந்தனர்.

"டேய், பையா! இங்கே என்னடா செய்கிறாய்?" என்று வீரப்பன் கேட்டான்.

"சுள்ளி பொறுக்குகிறேன்."

"சுள்ளி பொறுக்குகிறாயா! இந்தக் காட்டில் புலி இருக்கிறதே! இந்தப் பக்கம் வரவே எல்லோரும் பயப்படுகிறார்கள். உனக்குப் பயமே இல்லையா!"—வீரப்பன் ஆச்சரியத்துடன் கேட்டான். சின்னய்யன் அலட்சியத்துடன், "இல்லை" என்றான்.

"ஏன்? நீ வீராதி வீரனா?" என்று கேட்டான் வீரப்பன்.

"இல்லை! ஆனால், இல்லாத ஒன்றைப்பற்றி நான் ஏன் பயப்பட வேண்டும்?"

சின்னய்யனின் பதில் வீரப்பனுக்குப் புதிரா யிருந்தது.

"இல்லாத ஒன்று!" என்று கேட்டான் வீரப்பன்.

"ஆமாம்."

"நீ எதைக் குறிப்பிடுகிறாய்?"

"நீங்கள் வேட்டையாட வந்திருக்கும் புலியை!"

"அப்படி யென்றால் இந்தக் காட்டில் புலியே இல்லையா?"

"இல்லவே இல்லை!"

"ஊரார் கூறினார்களே?"

"ஆம். அது வெறும் கதை"

"கதையா! நிஜமாகவா!"

"நான் கட்டிவிட்ட கதைதான்!"

சின்னய்யன் இப்படிச் சொன்னதும், வீரப்பன் திகைத்தான். "நீ கதை கட்டிவிட்டாயா? ஏன்? அதனால் உனக்கென்ன லாபம்?" என்று கேட்டான்.

சின்னய்யன் சிரித்துக்கொண்டே சொல்ல ஆரம் பித்தான்:

"நான் ஏழை. என் அம்மாவை நான்தான் காப் பாற்ற வேண்டும். இந்தக் காட்டில் சுள்ளி பொறுக்கி, அதை விற்றுப் பிழைத்தேன். நல்ல வருமானம் கிடைத்தது. உடனே, தொழிலுக்குப் போட்டி முளைத் தது. பலர் என் வேலையைச் செய்யத்தொடங்கினர். அதனால், எனக்கு அதிகச் சுள்ளி கிடைக்காததுடன், விலையும் குறைவாகக் கிடைத்தது. கோடி வீட்டுக் குப்புப் பாட்டிதான் என்னோடு அதிகமாகப் போட்டி

போட்டாள். ஒருநாள் நான் அவளிடம், ‘இந்தக் காட்டில் புலி இருக்கிறது. நான் என் கண்ணுலே பார்த்தேன்’ என்று விளையாட்டுக்குச் சொன்னேன். உடனே அவள் புலியைக் கண்டதாக எல்லோரிடமும் கூறினாள். பலர் தாங்களும் கண்டதாகப் புளுகுகிறார் கள். எனக்குப் போட்டியாகச் சுள்ளி பொறுக்க வரு வோர் நின்றுவிட்டனர். பழையபடி என் வேலை நன்றாக நடக்கிறது” என்று முடித்தான் சின் னய்யன்.

வீரப்பன், “அட இழவே!” என்று வாய்விட்டுக் கத்தினான். அவனது ஆட்கள், இல்லாத புலியைக் கொல்ல எவ்வளவு தூரம் கஷ்டப்பட்டனர் என்பதை நினைத்துப் பார்த்தனர். உடனே சிரிப்புத்தான் வந்தது!

# அன்புமணியின் அப்பா

மகாதேவ முதலியாரின் மாடிவீடு, அந்த வட்டாரத்திலேயே அழகானது. ஆனால், மிகப் பெரிய வீடல்ல. மாடி வீட்டிற்கு முன்புறம் ஒரு சிறிய தோட்டம் இருந்தது. அந்தத் தோட்டத்தைச் சுற்றிச் சுவர் இருந்தது. மகாதேவருக்கு ஒரே ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் அன்புமணி.

தீபாவளிக்கு முதல்நாள் மாலை. மகாதேவரின் வீட்டின் முன்பாக ஏழைச் சிறுவர்களும், சிறுமிகளும் வரிசையாக உட்கார்ந்திருந்தனர். அவர்கள், அந்த மாடி வீட்டிற்குச் சிறிது தூரத்திலிருக்கும் குடிசைகளிலே வசிப்பவர்கள். அவர்கள் தங்களுக்குள் எதைப் பற்றியோ பேசிக் கொண்டும், சிரித்துக் கொண்டு மிருந்தனர். அப்போது உள்ளேயிருந்து அன்புமணி வெளியே வந்தான்.

"ஒரே குதூகலமாக இருக்கிறீர்களே! கொஞ்சம் பொறுத்திருங்கள். அப்பா இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்துவிடுவார்" என்றான்.

மறு நிமிஷமே கார் வரும் சப்தம் கேட்டது. சப்தம் வந்த திசையை எல்லோரும் ஆவலோடு பார்த்தார்கள்.

மாடி வீட்டின் முன்னால் வந்ததும், கார் நின்றது. உள்ளேயிருந்து மகாதேவர் வெளியே வந்தார். அவரைக் கண்டதும் ஏழைப் பிள்ளைகள் எழுந்து ஒதுங்கி நின்றனர். மகாதேவர் வீட்டிற்குள் நுழைந்

தார். டிரைவர் 'காரி'லிருந்து சீன வெடிகளும் மத்தாப்பூ பெட்டிகளும் கம்பி வாணங்களும் கொண்டு வந்து வீட்டின் முன்புறத்தில் உள்ள திண்ணையில் வைத்தான். ஒரு பட்டாசுக் கடையே வைத்து விடலாம். அந்த அளவுக்கு அங்கே பட்டாஸ்கள் இருந்தன.

ஏழைப் பிள்ளைகள் அவற்றை ஆவலோடு பார்த்தார்கள். உள்ளே சென்ற மகாதேவர் சிறிது நேரத்திற்குப் பின் வெளியே வந்தார். திண்ணையில் உட்கார்ந்தார். அன்புமணியும் பக்கத்திலே நின்ருன். அவர்கள் அருகிலே இருந்த வேலையாள் பட்டாசுக் கட்டுக்களைப் பிரித்து வைத்தான்.

மகாதேவர், "குழந்தைகளா, நீங்கள் எல்லோரும் ஒழுங்காக வரிசையில் நில்லுங்கள். ஒவ்



வொருவராக வந்து வாங்கிக்கொள்ளுங்கள்" என்றார். ஏழைக் குழந்தைகள் வரிசையாக நின்றனர். வேலைக்காரன் ஒரு சீன வெடிக்கட்டு, இரண்டு மத்தாப்பூ பெட்டிகள், இரண்டு கம்பிவாணங்கள் முதலியவற்றை எடுத்து மகாதேவரிடம் கொடுத்தான். அவர் அவற்றை வாங்கி வரிசையில் வந்த ஒரு பையனிடம் அளித்தார். அவன் வாங்கிக் கொண்டு ஒரு கும்பிடு போட்டுவிட்டுச் சென்றான். இன்னொரு பையன் வந்தான். அவனுக்கும் அப்படியே கொடுத்தார். இப்படியே அங்கு வந்திருந்த எல்லாக் குழந்தைகளுக்கும் சீன வெடி, மத்தாப்பூ பெட்டி, கம்பி வாணம் முதலியவற்றை அவர் கொடுத்தார். எல்லோரும் வாங்கிக் கொண்டு போய்விட்டனர். மகாதேவர், மீதத்தை உள்ளே வைக்கும்படி வேலையாளிடம் கூறி விட்டு, அன்புமணியுடன் மேல் மாடிக்குச் சென்றார்.

மாடியிலிருந்த விளக்கின் 'ஸ்விச்'சைத் தட்டி விட்டார். பிறகு அங்கிருந்த விசுப்பலகையின் மீது அமர்ந்தார். அன்புமணி அவர் அருகிலே உட்கார்ந்தான்.

மகாதேவர் வருடா வருடம் தீபாவளிக்கு முதல் நாள், அன்று செய்ததைப்போல நிறையப் பட்டாசுகளை வாங்கிக் கொண்டுவருவார்; அவற்றை ஏழைக் குழந்தைகளுக்குக் கொடுப்பார். இதைப் பல ஆண்டுகளாக அன்புமணி பார்த்து வந்தான். ஆனால், அவர் ஏன் இப்படிச்செய்கிறார் என்பது மட்டும் தெரியாது! ஏழைகளின் மீது இருக்கும் இரக்கத்தால் இவ்விதம் செய்கிறார் என்று முதலில் நினைத்தான். பிறகு இதற்கு வேறு ஏதாவது காரணம் இருக்கவேண்டும்

என்று எண்ணினன். அதைப் பலமுறை, அப்பா விடம் கேட்க நினைத்தான். ஆனல் கேட்கவில்லை! 'இன்று கேட்டுத் தெரிந்து கொள்ளலாமா?' என்று நினைத்துக் கொண்டிருந்தான்.

"அன்பு, என்னப்பா யோசிக்கிருய்?" என்று கேட்டார் மகாதேவர்.

"ஒன்றும் இல்லையப்பா!" என்று மழுப்பினன் அன்புமணி.

"தயங்காதே, சொல். ஏதாவது வேண்டுமா?" என்று கேட்டார் அவர்.

அன்புமணி சிறிது நேரம் பேசாமலிருந்தான். பிறகு, "அப்பா, ஆண்டு தோறும் தீபாவளிக்கு முந்திய நாள் ஏழைக் குழந்தைகளுக்குப் பட்டாசு வாங்கித் தருகிறீர்களே! இதற்கு ஏதாவது காரணம் இருக்குமா என்று யோசித்தேன்" என்ருன்.

"காரணம் இருக்கிறது" என்று பதிலளித்தார் மகாதேவர்.

"அதை நான் அறிந்துகொள்ளலாமா அப்பா?" என்று ஆவலோடு கேட்டான் அன்புமணி.

"அதை நிச்சயம் அறிந்து கொள்ளத்தான் வேண்டும், கேள்" என்று கூறிவிட்டு மேலே சொல்ல ஆரம்பித்தார்:

"அன்பு, அப்போது நான் உன்னைப்போல இருப்பேன். பழையவூர் கிராமத்தில் படித்துக் கொண்டிருந்தேன். அந்த ஊரிலுள்ள பள்ளியில் படிக்கச் சுற்றுப் புறத்திலிருந்தெல்லாம் மாணவர்கள் வருவார்கள். அப்போது நான் ஏழைச் சிறுவன். அப்பாவை இழந்து அம்மாவின் ஆதரவில் வளர்ந்

தவன். அம்மா எங்கெங்கோ வேலை செய்து என்னைக் காப்பாற்றி வந்தாள்.

பழையவூருக்கு நான்கு மைல் தூரத்தில் புதுவூர் இருந்தது. அது கிராமமல்ல; நகரம். அங்குதான் என் மாமா—அம்மாவின் தம்பி—தர்மலிங்கம் வசித்து வந்தார். அவர் பெரிய பணக்காரர். அவர் உதவி யிருந்ததால்தான் நான் படித்தேன்.

வருடத்தில் பல விழாக்கள், பண்டிகைகள் வருகின்றன. அவற்றை யெல்லாம் கிராமத்தினர் விமரிசையாகக் கொண்டாடுவார்கள். ஆனால், எங்கள் வீட்டில் மட்டும் எப்போதும் துக்கம்தான்! நான் மற்றவர்களை வேடிக்கை பார்ப்பேன்; அவர்களைப் போல் நம்மால் இருக்க முடியவில்லையே என்று வேதனைப் படுவேன்.

என் வேதனையைக் கண்டு அம்மா வருத்தப்படு வாள். அதைத் தவிர அவளால் வேறென்ன செய்ய முடியும்? தீபாவளி வரும்போது மட்டும், அம்மா என்னை அழைத்துக் கொண்டு மாமாவின் வீட்டிற்குச் செல்வாள். மாமா வீட்டில் தீபாவளி 'தடபுடலாக' இருக்கும். அங்காவது நான் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்பது என் அம்மாவின் எண்ணம்.

மாமா வீட்டில் நல்ல சாப்பாடு கிடைக்கும். பட்டாசு வகைகள் கிடைக்கும். ஆனால் அன்போ, ஆதரவோ அணுவளவும் கிடைக்காது. மாமி எரிந்து விழுவாள்! மாமாவின் இரு புதல்வர்கள் என்னை ஓர் உயிருள்ள மனிதப் பிறவியாகவே மதிக்க மாட்டார் கள். கேலி கிண்டல் மூலம் என்னைச் சித்திரவதை செய்வார்கள். அவர்கள் அடித்தால்கூட நான்

பேசாமல்தான் இருக்கவேண்டும். மாமா மட்டும் நல்லவர். ஆனால், அவரால் மனைவியை அடக்க முடியாது. பிள்ளைகளை அடக்க முயன்றால், மாமி பத்ரகாளியாக மாறி, 'பச்சைக் குழந்தைகளை ஏன் அடிக்கிறீர்கள்? அந்தப் படுபாவி, தரித்திரம் பிடித்த பயல் மகாதேவன் கோள் மூட்டினானா?' என்று சீறுவாள்.

இதனால் இவர்கள் வீட்டிற்குப் போக எனக்கு விருப்பமே இருப்பதில்லை. ஆனால், அம்மாவின் வற் புறுத்தலுக்காகச் செல்வேன்.

வழக்கம் போல அந்த வருஷம் தீபாவளிக்கு முதல்நாள் காலையில் அம்மாவுடன் புறப்பட்டு மாமா வீட்டிற்குச் சென்றேன். அன்று பகல், மாமாவின் 'அருந்தவப்' புதல்வர்களின் நண்பர்களில் சிலர் மாமா வின் வீட்டிற்கு வந்தார்கள். அவர்களில் ஒருவன் என் னைச் சுட்டிக் காட்டி, 'இவன் யார்?' என்று கேட்டான்.

மாமாவின் பெரிய மகன், 'இவனா? எங்கள் வீட்டு வேலைக்காரன்' என்றான்.

சிறிய மகன், "இல்லை! வேலைக்காரனாவது வேலை செய்துவிட்டுச் சாப்பிடுவான். இவன் தண்டச் சோற்றுத் தடிராமன். வெட்கமில்லாமல் தீபாவளி யன்று வீடுதேடிச் சோற்றுக்கு வந்து விடுவான்," என்றான். அத்துடன் நிற்காமல் என்னைப் பற்றி இன்னும் கேவலமாக ஏதேதோ கூறினர். அவர்களின் நண்பர்களும் என்னைக் கண்டபடி கிண்டல் செய்த னர். எனக்கு வந்த ஆத்திரத்துக்கு அளவே யில்லை. அதைத் தனியாகச் சென்று அழுது தீர்த்துக் கொண்டேன்.

அன்று மாலை என் மாமா வந்தார். அவர் கொண்டு வந்த பட்டாசுகளை மாமாவின் இரு மைந்தர்களுக்கும், எனக்கும் பிரித்துத் தந்தார். எனக்கு அதிகமாகத் தரக்கூடாதென்று அவர்கள் வாதாடினார்கள். அவர்களுக்குக் கொடுத்த அளவில், பாதி எனக்குத் தந்தார் மாமா. அதுவே மிக மிக அதிகம் என்று அவர்கள் எண்ணினார்கள். மாமா சென்றதும் இருவரும் என்னிடம் சண்டையிட்டார்கள். என் பட்டாசுகளைக் கேட்டார்கள். "நீ என்ன பிரபு வீட்டுப் பிள்ளையா? உனக்கு இவ்வளவு ஏன்? பிச்சைக்காரனுக்கு ஒன்றிரண்டு இருந்தால் போதாதா?" என்றனர். எனக்குக் கோபமும், ஆத்திரமும் கலந்து வந்தன. நான் கண்டிப்பாகத் தர முடியாது என்று கூறிவிட்டேன்.

உடனே இருவரும் போய் என் மாமியை அழைத்து வந்தார்கள். அவளிடம், நான் அவர்கள் பட்டாசைத் திருடிக் கொண்டதாகக் குற்றம் சாட்டினார்கள். என் மாமி, "ஏண்டா, திருட்டு நாயே! இந்த வேலை எத்தனை நாளாக? என்னென்ன திருடி யிருக்கிறாய்? அவர்கள் பட்டாசைக் கொடுடா" என்று கூறி, என் முதுகில் இரண்டு அடி கொடுத்தாள்; என்னிடமிருந்த எல்லாப் பட்டாசுகளையும் பிடுங்கி அவர்களிடம் கொடுத்து விட்டாள். எனக்கு அங்கிருக்கவே பிடிக்கவில்லை. நான் அழுதுகொண்டே வெளியே வந்தேன்.

அப்போது அந்த வீட்டில் வேலை செய்யும் கந்தன் என் எதிரே வந்தான். அவன் நல்லவன். அவனிடம், "கந்தா, அம்மாவிடம் நான் வீட்டுக்குப் போய்

விட்டதாகச் சொல்லு. அம்மாவை இங்கே இருந்து விட்டு வரச் சொல்லு” என்று கூறிவிட்டு, எங்கள் கிராமத்தை நோக்கி நடந்தேன். அப்போது இரவு மணி ஏழு இருக்கும்.

என் கால்கள் வேகமாக நடந்தன. என் மனம் எங்கெங்கோ சுற்றியலைந்தது. ஒரு மைல் வந்திருப்பேன். அதற்குள் வானம் கறுத்தது; மேகம் இடித்தது ; மழை ‘சோ’ வென்று பெய்தது.

நான் மழையைக் கண்டு அஞ்சி நடுங்கி நின்றுவிடவில்லை. மழையிலேயே நனைந்து சென்றேன். மாமியும், அவளது பிள்ளைகளும் என்னை நடத்திய விதத்தை நினைக்க நினைக்க என் கண்களில் நீர் பெருகியது. வானத்திலிருந்து வந்தது மழை நீர் ; என் கண்களிலிருந்தது வழிந்தது கண்ணீர். இரண்டும் சேர்ந்து என் உடையை நனைத்தன. உடலையும் நனைத்தன. அழுதுகொண்டே நடந்தேன்.”—மகாதேவர் இந்த இடத்தில் நிறுத்தினர். அன்புமணியின் கண்களில் நீர் வழிந்தது. அவன் ஏறிட்டுப் பார்த்தான். அப்பாவின் கண்களிலும் நீர் நிறைந்திருந்தது. அவர் அதைத் துடைத்துக்கொண்டார். பிறகு சமாளித்துக்கொண்டு, விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தார் :

“மழை நிற்கவே யில்லை நானும் நடந்துகொண்டே யிருந்தேன். புதுவூருக்கும், பழையவூருக்கும் நடுவே ஒரு கிராமம் இருந்தது. நான் அந்தக் கிராமத்தை அடைந்து விட்டேன். அங்கு மழைக்கு ஒதுங்கப் பல வீடுகள், கடைகள் இருந்தன. ஆனாலும் நான் நடந்துகொண்டே இருந்தேன்.

அப்போது 'மகாதேவா!' என்ற குரல் கேட்டு நின்றேன். என் எதிரே ஒரு கையில் தாழம் குடையுடனும், மற்றொரு கையில் ஒரு சிறு லாந்தர் விளக்குடனும் என் வகுப்பில் படிக்கும் சுப்பையன் நின்று கொண்டிருந்தான்.

'தேவா, எங்கே போய்விட்டு வருகிறாய்? மழையில் நன்றாக நனைந்திருக்கிறாயே!' என்று கேட்டான்.

நான் ஒன்றும் பதில் கூறாமல் நின்றேன். அவன் கடையில் ஏதோ சாமான் வாங்க வந்தானாம். என்னை இழுத்துக்கொண்டு கடைக்குப் போனான். தோளில் மாட்டியிருந்த பையில் ஏதோ சில சாமான்களை வாங்கினான்; பிறகு, என்னை அழைத்துக்கொண்டு அவன் வீட்டிற்குச் சென்றான். நான் களைத்திருந்தேன்; பேசாமல் அவனுடன் சென்றேன்.

வீட்டை யடைந்ததும், அவன் தாய் என் நிலையைக் கண்டு வருந்தினாள். துணி கொண்டு வந்து என் தலையைத் துவட்டி விட்டாள். சுப்பையன், அவன் உடுக்கும் துணியைக் கொண்டு வந்து கொடுத்தான். நான் அதை அணிந்து கொண்டேன். பிறகு அவனிடம் நடந்ததைக் கூறி அழுதேன். அவன் என்னைத் தேற்றினான். தன் வீட்டில் தீபாவளிக்கு இருந்து போகும்படி சொன்னான்.

மறுநாள் அவன் வீட்டிலிருந்தேன் அவனும் ஏழைதான். அவன் வீட்டிலிருந்த பட்சணத்தைத் தந்தான். மாமா வீட்டில் தருவதுடன் அதை ஒப்பிட்டால் அது மிகவும் சாதாரணம். ஆனாலும் அன்புடன் எனக்கு அந்தப் பட்சணத்தைத் தந்தான். அதனால் எனக்கு அது அமிர்தம்போல் இருந்தது.

சுப்பையனின் அப்பா, அவனுக்காக இரண்டு சீன வெடிகளும் மத்தாப்பு பெட்டிகளும், நான்கு கம்பி வாணங்களும் வாங்கிக் கொடுத்திருந்தார். அவற்றில் பாதியை எனக்கு முழு மனத்தோடு, அன்போடு, அவன் தந்தான். மாமா வீட்டில் தரும் பட்டாசுகளை விட அவை மிக மிகக் குறைவுதான். ஆனாலும் நான் சுப்பையன் தந்தவற்றையே அதிகமாக, உயர்ந்ததாக நினைத்தேன். அவற்றைக் கொளுத்தும்போது அளவில்லாத மகிழ்ச்சியடைந்தேன்.

சுப்பையனும், அவன் பெற்றோரும் என்னிடம் காட்டிய அன்பை இன்றும் என்னால் மறக்க முடியவில்லை. இனி என்றும் மறக்க மாட்டேன். தீபாவளிக்கு மறுநாள் நான் வீடு சென்றேன். என் தாய் நான் கிராமத்திற்குப் போய் விட்டதைக் கேட்டு வருந்தினாளாம். அவளும் அங்கிருந்து வந்துவிட நினைத்தாளாம். ஆனால், மாமா கோபித்துக் கொண்டால், தற்போது கிடைக்கும் சிறிய உதவியும் நின்று விடுமே என்றுதான் உடனே வரவில்லையாம். இவ்வளவையும் என்னிடம் அம்மா கூறினாள். நான் நடந்ததைக் கூறினேன். என் அம்மா சுப்பையனின் பெற்றோரை வாழ்த்தினாள்.

பிறகு நான் நன்றாகப் படித்தேன். பல பரீட்சைகளில் தேறினேன். உயர்ந்த வேலை கிடைத்தது; பொருளும் புகழும் என்னைத் தேடி வந்தன. அதன் பின்பும் சுப்பையன் செய்த உதவியை—அவன் அன்பை நினைத்துக் கொண்டே இருந்தேன்.

என்னைப்போல எத்தனை ஏழைப் பிள்ளைகள், பணக்காரர்கள் பட்டாசு கொளுத்தும்போது, 'நாமும்

இப்படி இருக்க முடியவில்லையே!' என்று எண்ணி வருந்துவார்கள்! இதை நான் எண்ணிப்பார்த்தேன். சுப்பையன் தன்னிடமிருந்த பட்டாசை எனக்குப் பகிர்ந்து கொடுத்ததை நினைத்துக் கொண்டேன். ஏழைக் குழந்தைகள் தீபாவளி நாளிலாவது சிறிது மகிழ்ச்சியோடு பட்டாசு கொளுத்தி மகிழ வேண்டும். நமக்கு சுப்பையன் செய்த உதவியை நாமும் பிறருக்குச் செய்ய வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டேன்.

அன்றிலிருந்து, இன்று செயவதைப் போல என் நிலைமைக்குத் தக்கபடி செய்து கொண்டு வருகிறேன். அதனால் என் மனம் அமைதியடைகிறது; ஆனந்தம் கொள்கிறது. என் பழைய நிலைமையை மறக்காமல் இருக்கவும் முடிகிறது'' என்று கூறி முடித்தார்.

பிறகு, ''அன்பு, ஏழைகளாக இருந்தாலும் அவர்களிடமிருக்கும் நல்ல பண்பை நான் சொன்னதிலிருந்து அறிந்து கொண்டிருப்பாய். பெரியவனானதும் அவர்களின் மகிழ்ச்சிக்காக நீ ஏதாவது செய்ய வேண்டும். மறக்கமாட்டாயே?'' என்று கேட்டார் மகாதேவர்.

அன்புமணி உறுதியான குரலில், ''நிச்சயமாகச் செய்வேனப்பா'' என்றான். அவன் பதிலைக் கேட்டு ஆனந்தமடைந்தார் மகாதேவர். அப்பாவும், மகனும் கீழே இறங்க எழுந்தனர். தூரத்திலிருந்த குடிசைகளின் அருகில் சிறுவர்கள் பட்டாசு கொளுத்திக் கொண்டிருப்பதைக் கண்டனர். அதைக் கண்ட இருவரின் அகமும் முகமும் ஒருங்கே மலர்ந்தன.

...RSITY EXTENSIO...